PUBLIC LIBRARY
JAFFNA
10 MAY 2011

மலர் : 135
இதழ் : 09
பக்கங்கள் : 08
திகதி : 08-05-2011
விலை 15. 00/=

இலங்கையின் முதல் தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு
Registered as a Catholic weekly (G.P.O.197) Founded 19 Feb.1876

# பாதுகாவலன்
# Paathukavalan

St. Joseph's Catholic Press, 360 Main Street Jaffna, Sri Lanka. Tel 021-222-2378 Fax 021-222-9041, ISSN 1391-7633

யாழ் மறைமாவட்டத்தின் உத்தியோகபூர்வ கத்தோலிக்க பத்திரிகை

## – அருளாளர் இரண்டாம் ஜான்போல் –

### - அருளாளர் இரண்டாம் ஜான்பாலுக்கான பட்டமளிப்புத் திருப்பலி -




2011. மே 1ம் தேதிஞாயிறு காலை உரோம் நகரில் திருத்தந்தை இரண்டாம் ஜான் பாலின் அருளாளர் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ள பத்து இலட்சத்திற்கும் மேற்பட்ட திருப்பயணிகள் கூட்டம் கூட்டமாய் தங்கள் குழுவுக்குரிய கொடிகளையும், பாப்பிறைக் கொடிகளையும் தாங்கி புனித பேதுரு பேராலய வளாகம் நோக்கி வந்த பெருந் திரளான மக்கள், நெரிசலில் காரணமாக மெது வாக அடியெடுத்து வந்தனர். பட்டமளிப்புத் திருப் பலி காலை 10.00 மணியளவில் ஆரம்ப மாகியது.

(தொடர்ச்சி 3ம் பக்கம்)


## இளவாலை மறைகோட் முதல்வர்



அருட்பணி. S. யூஜின் பிறான்சிஸ் அடிகளார் யாழ் ஆயரால் இளவாலை மறைக் கோட்ட முதல்வராக நியமிக்கப் பட்டுள்ளார். கடந்த காலத்தில் அருட்பணி. A.P. தேவசகாயம் இப்பணியை மேற்கொண்டார்.

இலண்டன் தமிழ் ஆன்மீக குரு வாக பல வருடங்கள் பணியாற்றிய அருடபணி யூஜின் அடிகளார் தற்போது பண்டத்தரிப்பு பங்குத்தந்தையாகவும் இளவாலை மறைக்கோட்ட முதல்வரா கவும் பணிபுரிகிறார். இவர் பணி சிறக்க வாழ்த்துகினறோம்.

## எம் புதிய குருக்கள்



எதிர் வரும் வைகாசி மாதம் 18ம் நாள் புதிய குருக்களாக யாழ் ஆயர் அவர்களால் திரு நிலைப்படுத்தப்படவுள்ள அருட்பணி யாளர்கள் கீதபொன்கலன் லக்ஸ்மன், பத்திநாதர் றெனாட் செறில்நெஸ், ஜெயராசா எல்மோ அருள் நேசன் ஆகியோரை "பாதுகாவலன்" ஊடாக யாழ் திருச்சபை வரவேற்று அறிமுகப்படுத்தும் வேளை உங்கள் பணிக் குருத்துவ வாழ்வு சிறக்க எமது செபங்களையும், வாழ்த்துக்களையும் காவலன் குடும்பமாக தெரிவித்துக் கொள்கின்றோம்.


ஜெயராசா எல்மோ அருள்நேசன்


பத்திநாதர் றெனாட் செறில்நெஸ் [சுமன்]


கீதபொன்கலன் லக்ஸ்மன்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

## அமல மரித் தியாகிகள் சபைக்கு மேலும் 5 புதிய குருக்கள்


மிக்கேல் ஜெகன் குமார் கூஞ்ஞ


தேவராசா ஜெனோ கரன்ஸ்


போல் மத்தியு மதன்றாஜ்


யேசுதாசன் லெபோன் சுதன்


சந்தியாப்பிள்ளை பிலிப் றஞ்சனதுமார்

இவ்வருடம் அமலமரித்தியாகிகள் சபைக்கு மேலும் 5 புதிய குருக்களை அளிக்கும் இறை வன் திருவுளம் கொண்டுள்ளார். இவர்களில் அருட்தந்தையர்களான மிக்கேல் ஜெகன்குமார் கூஞ்ஞ அமதி, தேவராசா ஜெனோ கரன்ஸ் அமதி, போல் மத்தியு மதன்ராஜ் அமதி,ஆகியோர் 28.04.2011 (வியாழக்கிழமை) அன்று மன்னார் தூய செபஸ்தியார் (தொடர்ச்சி 2ம் பக்கம்)

## அமல மரித்தியாகிகள் சபையின் நிறுவுனர் புனித இயூஜின் டீ மசனட் அவர்களின் 150வது வருட விண்ணக பிறப்பு

மேற்படி நிகழ்வையொட்டி 21-05-2011 சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ் பேராலயத்தில் யாழ். ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம அவர்கள் தலைமையில் நன்றிக் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். அனைவரையும் பங்குபெற அழைக்கின்றோம்.

"நன்றி"

அருட்பணி போல் நட்சத்திரம் அமதி
யாழ் மாகாண முதல்வர், யாழ் மாகாண அமதிகள்.

## யாழ் அமதிகளின் மாகாண முதல்வர்



யாழ் மாகாண அமதிகளின் முதல்வர் அருட்பணி ம. போல் நட்சத் திரம் அமதி அவர்கள், உரோமையிலுள்ள அமல மரித்தியாகிகளின் சிரேஸ்ட தலை வரினால் யாழ் அமதிகளின் மாகாண முதல் வராக மீள் நியமனம் செயய்ப்பட்டுள் ளார். இவர் தொடர்ந்தும் எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு யாழ் மாகாண அமதி களின் முதல்வராக பணியாற்றுவார். இவரது பணி சிறக்க இறைவனின ஆசீ ரோடு கூடிய வாழ்த்துக்களையும் செபங்களையும் தெரிவித்து நிற்கின்றோம்.

யாழ் மாகாண அமதிகள் குழுமம்

## "கிறிஸ்தவர்களாக வாழவேண்டும் என்றால், மரியாளின் பக்தர்களாக வாழுங்கள்."

### யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர்



இறைபதம் அடைந்த திருத்தந்தை இரண்டாம் யோண் பவுல் அவர்களால் எழுதப்பட்ட சுற்றுமடல் ஒன்றில் குறிப்பிட்ட ஆழமான உண்மைக் கருத்தை மேற்கோள் காட்டி, மேற்குறிப் பீட்ட கருத்தை இளவாலை புனித அன்னாள் ஆலயத்தில் இடம் பெற்ற வியாகுல அன்னையின் திருவிழாத் திருப்பலிக்குத் தலை மைதாங்கி, மறையுரை ஆற்றிய யாழ் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்கலாநிதி. யஸ்ரின் ஞானப் பிரகாசம் அவர்கள் குறிப்பீட்டார்.

மேலும் அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில், கத் தோலிக்கராகிய எமக்கும் எமது வாழ்வீற்கும் அன்னை மரியாள் பெரும் அருட்கொடையாகவும், முன்மாதிரிகையாகவும் விளங்கு கின்றாள். அதனால் தான் இடத் திற்கு இடம் பல பெயர்களைச் சூட்டி, யாததிரைத் தலங்களை யும் அமைத்து அவளது பக்தர் களாக வாழ்கின்றோம். ஆனால் மரியாளின் வாழ்க்கை முறை யும் இறைவன் மீதான ஆழ்ந்த பற்றுறுதியும் எம்மிடையே இருக் கின்றதா என்பதை நாம் அடிக் கடி ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

இறைவனின் திட்டத்திற்கு 'ஆம்' என்று பதில் கொடுத்ததி லிருந்து பிரமாணிக்கம் மிக்க வராக வாழ்ந்து வந்தாள். எனி னும மரியாள் உலகத்தில் வாழ்ந் தாலும், உலகப் போக்குகளில் தன்னை மூழ்கடித்தவளாக வாழாது, எவ்வேளையிலும் இறைதிட்டத்திற்கு பணிந்து நடப் பதில் முன்மாதிரிகையாக விளங் கினாள். அதனால் அவள் அனு பவித்த துன்பங்கள் உலகில் எவரும் அனுபவித்திராத வியா குலங்களைக் கொண்டுள்ளன. இவற்றைத் தொகுத்தே நற் செய்தி ஏடுகள் மரியாள் ஏழு வியாகுலங்களை அனுபவித்து இறைவனது மீட்புத் திட்டம் நிறைவேற காரணமாக இருந் தாள் என்று சான்று பகர்கின் றன. இந்த உண்மையைப் பிரதி பலித்தே, உலகின் பிரபல ஓவி யன் என்ற சாதனையை நிலை நிறுத்திய மைக்கல் அஞ்சலோ வும, வியாகுல அன்னையின் சிலையை வடிவமைத்த பின் அதற்கு இட்ட பெயர் 'பிரமாணிக்

(தொடர்ச்சி 2ம் பக்கம்)

# எம் புதிய குருக்கள்.... (1ம் பக்கத் தொடர்ச்சி)

### ஜெயராசா எல்மோ அருள்நேசன்

சில்லாலை புனித கதிரை மாதா ஆலய பங்கைச் சேர்ந்த திரு திருமதி ஜெயராசா டெய்சி லோறன்சியா தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனாக 27-8-1982இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை யாழ் புனித மரியாள் வித்தியாலயததிலும் இடைநிலை, உயர்நிலைக் கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். இறையழைப்பினை உணர்ந்து 1997ல் புனித மாட்டினார் சிறிய குரு மடத்தில் இணைந்த இவர் 2002 இல் புனித பிரான்சிஸ்கு சவேரியார் கல்லூரியில் இணைந்தார். அங்கு தனது மெய்யியல், இறையியல் கல்வியில் முறையே 2005, 2010இல் இளங்கலைமாணிப் பட்டங்களைப் பெற்றுக் கொண்டார்.

18-11-2010 அன்று தியாக்கோனாக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் பாசையூர் புனித அந்தோனியார் ஆலயத்திலும் யாழ் புனித மரியன்னை பேராலயத்திலும் திருத்தொண்டராக பணிபுரிந்தார்.

இவர் 21-5-2011 அன்று தனது நன்றித்திருப்பலியை சில்லாலை புனித கதிரை மாதா ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### பத்திநாதர் றெனாட் செறில்நெஸ் [சுமன்]

மாதகல் தூய தேமையார் ஆலய பங்கைச் சேர்ந்த திரு. திருமதி பத்திநாதர் மரிய ஜெனிற்றா தம்பதிகளின் மூன்றாவது புதல்வனாக 19-8-1982 இல் பிறந்தார். இவர் தனது ஆரம்பக் கல்வியை மாதகல் தூய தோமையார் றோ.க. பாடசாலையிலும் இடைநிலைக் கல்வியை இளவாலை தூய கென்றியரசர் யாழ் தூய பத்திரிசியார் கல்லூரிகளிலும் உயர் கலவியை தூய பத்திரிசியார் கலலூரியிலும் கற்றுத்தேர்ந்தார். 1996ஆம் ஆண்டு இறை அழைத்தலை உணர்ந்து யாழ் தூய மாட்டினார் குருமடத்தில் இணைந்த இவர் 2002 யாழ் தூய பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் இணைந்தார். அங்கு தனது மெய்யியல் இறையியல் இளங்கலைமாணி பட்டங்களையும் பெற்றுக்கொண்டார். 18-11-2010 அன்று திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப் பட்ட இவர் யாழ் தூய மரியன்னை பேராலயத் திலும், நாவாந்துறை பங்கிலும் திருத்தொண்டு பணி ஆற்றினார்.

22-5-2011 அன்று தனது முதல் திருப்பலியை மாதகல் தூய தோமையார் ஆலயத்தில் ஒப்புக்கொடுப்பார்.

### கீதபொன்கலன் லக்ஸ்மன்

எழுவைதீவு தூய தோமையார் ஆலய பங்கைச் சேர்ந்த திரு திருமதி கீதபொன்கலன் மேரியசிந்தா தம்பதிகளின் இரண்டாவது புதல்வனாக 12-10-1979இல் பிறந்த இவர் தனது ஆரம்பக் கல்வியை எழுவைதீவு றோ.க.த.க பாடசாலையிலும் இடைநிலை கல்வியை ஊர்காவற்துறை தூய அந்தோனியார் கல்லூரியிலும், நெடுந்தீவு மகாவித்தியாலயத்திலும் கற்று உயர் நிலைக்கல்வியை யாழ் தூய பத்திரிசியார் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார். 1997ம் ஆண்டு இறைஅழைத்தலை உணர்ந்து யாழ் தூய மாட்டின் குருமடத்தில் இணைந்த இவர் 2002ம் ஆண்டு யாழ் தூய பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியிலும் இணைந்தார். அங்கு தனது மெய்யியல், இறையியல் இளங்கலைமாணி பட்டங்களையும் பெற்றுக் கொண்டார். 18-11-2010 அன்று திருத்தொண்டராக திருநிலைப்படுத்தப்பட்ட இவர் யாழ் குருநகர் தூய யாகப்பர் பங்கிலும் யாழ். பாசையூர் தூய அந்தோனியார் பங்கிலும் திருத் தொண்டர் பணியை மேற்கொண்டார். 23-5-2011 அன்று தனது முதல் நன்றித் திருப்பலியை எழுவைதீவு தூய தோமையார் ஆலயத்தில ஒப்புக் கொடுப்பார்.

# அமல மரித் தியாகி... (1ம் பக்கத் தொடர்ச்சி)

பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களினால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டனர்.

மேலும் திருத்தொண்டர்களான யேசுதாசன் லெபோன் சுதன் அமதி, சந்தியாப்பிள்ளை பிலிப் றஞ்சனகுமார் அமதி ஆகியோர் எதிர்வரும் 18-05-2011 (புதன்கிழமை) யாழ் தூய மரியன்னை பேராலயத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு தோமஸ சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களால் குருக்களாக திருநிலைப்படுத்தப்படவுள்ளனர்.

இவர்கள் தங்களது ஆரம்ப உருவாக்கத்தை யாழ் கொழும்புத்துறை தூய சூசையப்பர் சிறிய குருமடத்திலும், தங்களது ஆரம்ப நவசந்நியாசத்தை மக்கோணவிலும், நவசந்நியாசத்தை பண்டாரவளையிலும், மெய்யியல் கல்வியை கண்டி தேசிய குருமடத்திலும், இறையியல் கல்வியை யாழ் தூய சவேரியார் குருமடத்திலும் மேற்கொண்டனர்.

இறைவனின் பரந்த திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய அழைக்கப்பட்ட இவர்களது பணி சிறக்க வாழ்த்துகிறோம்.

# "கிறிஸ்தவர்களாக வாழவேண்டும் .....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம்' [Faithfullness] என்பதாகும். ஏனென்றால் பிரமாணிக்கம் என்ற வார்த்தைக்கு முற்றிலும் இலக்கணமானவள் மரியாள். என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டுவதற்காக. இத்தகைய மேன்மையை அன்னைமரி கொண்டிலங்குவதனாலேயே இத்தபக்காலத்தல் வியாகுல அனனையின் விழாவையும் நாம் மேற்கொண்டு அவளின் முன்மாதிரிகைகளைப் பின்பற்றி எமது வாழவிலும் ஏற்படும் துன்பஙகளை பொறுமையுடன் தாங்கி விசுவாச வாழ்விற்குச் சான்றுபகர அழைக்கப்படுகின்றோம்.

எனவே இன்றைய சூழலில் தமது பிள்ளைகளை நல்லொழுக்கத்திலும், இறைபற்றுறுதியிலும் வளர்த்து மனித மாண்பை நிலைநாட்டும் பொறுப்பைத் தம் பிள்ளைகள் கொண்டு விளங்க, பெற்றோர் அன்னை மரியாளின் முன்மாதிரிகளை தம்மிலே கொண்டு, தியாகம், அர்ப்பணிப்பு, பிரமாணிக்கம், துன்பத்திலும் விசுவாச வாழ்வைக்கைக் கொள்ளுதல் போன்ற பணுபுகளை தம்மிலே தாங்கி இறைதிட்டத்திற்குப் பணிந்து நற்சமுதாயத்திற்கான மக்களை உருவாக்க முன்வர வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

புனித வியாகுல அன்னையின் திருவிழா நிகழ்வுகள் யாவும் புதிய பங்குத் தந்தை அருட்பணி. A.C. கிறிஸ்தோப்பர் அவர்களின் வழிகாட்டலில் இடம் பெற்றன.

தகவல் :S.M.வுளோறன்ஸ்

# அருட்பணி சுறத்ஜீவன்
## நீ குருத்துவத்தின் புதிய ஒரு அத்தியாயம்



2009. மே 18ம் திகதி எங்களின் செவிகளில் எட்டிய அருட்பணி சறாவின் மரணச்செய்தி எமக்கு ஒரு பேரிடியாக இருந்தது. மாண்டு போன் அப்பாவி மக்களின் கல்வாரியாக இருந்த முள்ளிவாய்க்காலில் இவரின் சிலுவை சுமப்பும் மரணமும் பலிக் குருததுவத்தின் தடங்களில் ஒரு புதிய அத்தியாயத்தை வரைகின்றது. "இறுதி முடிவு வரை மக்களுடன் நிற்பேன்" என்று அடிக்கடி இவரின் வாயிலிருந்து வந்த வார்த்தைகள் இவரின் இறை அனுபவத்தின் ஆழத்தை எமக்கு காட்டி நின்றது. கண்ணுக்கு முன்னால் மக்கள் அணுவணுவாக துடிதுடித்து மாண்ட போது இறைபணியாளர்களின் பிரசன்னமும் உடனிருப்பும் இம்மக்களுக்கு தேவை என்று இவரது மனதில் எழுந்த எண்ணம் இவரது இறை அன்பின் ஒரு வெளிப்பாடாக இருந்தது.

அருட்பணி சறத்ஜீவன் பலரது உள்ளங்களில் இடம்பிடித்த ஒரு இறை பணியாளன். எதையும் நல்மனதோடு ஏற்றுக் கொள்ளும் துணிவு கொண்டவர். கிளிநொச்சி, உருத்திரபுரத்தின் பங்குக்குருவாக பணியாற்றிக்கொண்டிருந்த போது வன்னி மறைக்கோட்ட யேசு சபை அகதிகள் பணி நிறுவனத்தின் இயக்குனராகவும் கடமை புரிந்தவர். இடப் பெயர்வின் ஆரம்பகாலங்களில் தன்னால் இயன்ற பணியை மக்களுக்கு முழுமையாக ஆற்றி நின்றவர்.

வறிய மாணவர்களின் கல்வியில் அக்கறை கொண்டவராக மாலை நேர வகுப்புக்களும் முன்பள்ளிகளும் ஒழுங்காக நடைபெற வேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாக செயற்பட்டு அவை நடைபெறும் இடங்களை நேரடியாக சென்று கண்காணித்து குறைநிறைகளை அறிந்து அவைகளுக்கு உரியவற்றை செய்து நின்றவர். மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நேரடியாக வவுனியாவிற்கு சென்று கொள் முதல் செய்து பொருட்கள் மிகவும் தட்டுப்பாடான காலத்திலும் இடம்பெயர்ந்த மக்களுக்கு விநியோகிப்பதில் இவரது பங்கு இருந்தது.

உருத்திரபுர மக்களும் இடம் பெயர வேண்டிய நிலை ஏற்பட்ட போது அந்தப் பகுதியில் வாழ்ந்த மக்கள் அனை வரும் இடம்பெயர்ந்த பிற்பாடு அந்த இடத்தை விட்டு இறுதி மனிதனாக இவர் வெளியேறியது எல்லோர் மனங்களிலும் அழியாத இடத்தை பிடித்தது. இவரின் பணி 2008 புரட்டாதி மாத இறுதிப் பகுதியில் வட்டக்கச்சி பிரதேசத்தில, கல்மடு என்னும் இடத்தில் சில வசதிக் குறைபாடுகள் மத்தியிலும் தடங்கலின்றி நடை பெறத்தொடங்கியது. ஆன்மீகப் பணியோடு தன்னால் இயன்ற சமூகப் பணியையும் நிறைவாக மக்களுக்கு ஆற்றிக் கொணடிருந்தார்.

கல்மடு, வட்டக்கச்சி பகுதிகளிலும் யுத்தத்தின் சத்தங்கள் கேட்கத் தொடங்க தனது பணியிடத்தை மூங்கிலாறு உடையார் கட்டுப் பகுதிக்கு குறிபபிட்ட சில நாட்கள் இடைவெளிக்குள் மாற்றிக் கொண்டார். ஒரு சில தடவைகள் அகோர எறிகணைத் தாக்குதலுக்குள் சிக்குண்டு பயங்கரமான அனுபவத்தை பெற்றுக் கொண்டார். இதனை மற்றவர்களுடனும் பகிர்ந்துள்ளார். மூங்கிலாறு பிரதேசத்தில் இவர் ஆற்றிய நிவாரணப் பணி மிகவும் முக்கியமானது. பொருட்கள் தட்டுப்பாடான காலத்தில் அவற்றை பொதி செய்து மக்களுக்கு விநியோகித்து உன்னத பணி ஆற்றினார். இவர் மிகவும் இரக்க சுபாவம் கொண்ட ஒரு இறைபணியாளர்.

அதற்குப் பிற்பாடு சுதந்திரபுரம், இரணைப்பாலை, வலைஞர் மடம், முள்ளிவாய்க்கால் என மக்களோடு சேர்ந்து இடம் பெயர்ந்து தனது இருப்பால் இறை பிரசன்னத்தை வெளிப்படுத்தி மக்களுக்கு நம்பிக்கை கொடுத்தார். முகம் கோணாமல் எதற்கும் துணிந்தவராக பலவிதமான வேலைகளை செய்தவர். வன்னி மறைக்கோட்ட குருக்கள் எல்லோரும் வலைஞர்மட ஆலயத்தில் தஞ்சம் அடைந்த வேளையில் இவரும் அங்கு இருந்தார். மக்களின் வாழ்விடங்கள் மிகவும் குறுகிய நிலையில் நாற்புறமும் யுத்தத்தால் சூழப்பட்ட போது பதுங்கு அகழிகளை விட்டு வெளியில் நடமாடுவது உயிராபத்தான விடயமாக இருந்தது. அந்தக் காலத்தில் வீதியினால் பயணிப்பவர்கள் திடீரென நடத்தப்படும் எறிகணைத் தாக்குதலிலும் துப்பாக்கி சூட்டாலும் கொல்லப் படும் நிலைமையிலும் கூட இவர் உறுதியோடு பயணித்தார். வெளியில் பயணிக்கும் போது தான் மரணிக்க நேர்ந்தால் வெள்ளை அங்கியுடன் மரணிக்க வேண்டும் என்பதில் உறுதியாய் இருந்த இவர் ஒரு போதும் வெள்ளை அங்கி அணியாமல் வெளியில் செல்லமாட்டார்.

மக்கள் வலைஞர் மடம், மாத்தளன் பகுதிகளீல் கடற்தொழில் செய்ய ஏதுவான சூழ்நிலை இருந்த வேளையில் இவர் அதிகாலையில் எழுந்து அங்குள்ள குருக்களுக்கு மீன் வாங்குவதற்க்காக கடற்கரைக்கு சென்று அங்கு மக்கள் படும் துன்பத்தை கண்டு வேதனைப்படுவார்.

2009ம் ஆண்டு பரிசுத்தவார வழிபாடுகள் வலைஞர்மடம். இரட்டை வாயக்கால் ஆகிய இரண்டு இடங்களில மட்டுமே நடைபெற்றது. வலைஞர் மடத்தில் அநேகமான குருக்களும் அருட்சகோதரிகளும் வழிபாடுகளை மக்களுககாக ஒழுங்குபடுத்தினார்கள். இரட்டை வாய்க்கால் செல்வது மிகவும் உயிராபத்தான விடயமாக இருந்தாலும் இரண்டு அருட்பணியாளர்களுடன் தானாக முன் வந்து தானும் சென்று அந்த மக்கள் பரிசுத்த வார வழிபாடுகளில் முழுமையாக பங்குகொள்ள மிகவும் உதவியாக இருந்தவர்.

மே 13ம் திகதி புனித பற்றிமா அன்னையின் பெருவிழா அத்தோடு அந்த நாள் அவருடைய பிறந்த நாள். இதனால் தான் என்னவோ தேவமாதாவின் மீது இவர் அதீத பக்தி கொண்டவர். மூன்று தடவைகளுக்கு மேலாக தொடர்ச்சியான எறிகணைத் தாக்குதலகளில் சிக்குண்ட பொழுதெல்லாம் கைகளில் செபமாலை ஏந்தி தொடர்ச்சியாக பல செபமாலைகளை சொல்லி மற்றவர்களையும் செபிக்க தூணடி மரியன்னையின் அடைக்கலத்தில் தன்னோடு இருந்தவர்களை ஒப்படைத்து எல்லோரையும் காப்பாற்றினார். தொடர்ச்சியாக பல நூற்றுக்கணக்கான எறிகணைகள் தம்மை சுற்றி விழும் போது நிதானமாக இருந்த மக்கள் பயத்தினால் கதறி அழும் போது "அழவேண்டாம் அழுவதனால் பயன் இல்லை செபமாலையை கைகளில் ஏந்தி செபமாலை சொல்லுங்கள்" என அறிவுறுத்தி உரத்த குரலில் செபமாலை செபிக்க ஆரம்பிப்பார். அகோர தாக்குதலின் மத்தியிலும் அழுகுரல்கள் அடங்கி எல்லோருடைய நாவும் அன்னை மரியாளின் நாமத்தை உச்சரிக்க புதுமை அங்கு நடைபெறும் மே மாதம் 17ம் திகதி இரவு முழுவதும் செபமாலையை கையில் ஏந்தி செபித்துக் கொண்டிருந்தார.



(தொடர்ச்சி 6ம் பக்கம்)


# வளமாகும் குடும்ப வாழ்வு

அருட்பணி எஸ்.ஜே. இராஜநாயகம்

## குடும்பப் பக்கம்

(தொடரும்....)

**2. பாய்ம நுண்ணறிவு (Fluid Intelligence)**



புதிதாக வரும் பிரச்சனைகளுக்கு இங்கு ஒருவர் தனது கற்கும் திறனை பாவித்துப் புதுப்புது வியூகங்களைக் கையாண்டு தீர்வுகளை ஏற்படுத்துவர். இதைத் தளர்வான நுண்ணறிவு என்றும் சொல்லலாம்.

நுண்ணறிவு வயதுக்கு ஏற்ப மாற்றமடைகின்றது என்பது ஆராய்ச்சியாளர்களின் கருத்து. திண்ம நுண்ணறிவு மூலம் பழக்கமான திறன்களைப் பாவித்து அதை வாலிபப் பருவத்திலிருந்து பல வருடங்களினூடாக விருத்தி செய்யப்படுகின்றது. இதனால்தான் தலைமைத்துவத் தொழில்களை 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இதற்கு எதிராக பாய்ம நுண்ணறிவு புதிய பிரச்சனைகளுக்குப் புதிய யுக்திகள் வருகின்றது. இத்தகைய திறன்கள் நடுத்தர வயதிற்குப்பின குறைவடைகின்றது. இதன் விளைவு வயது சென்றவர்களுக்கு கற்பிப்பது மிகவும் கஷ்டமானதாக இருக்கின்றது. அவர்கள் தமக்குத் தெரிந்தவைகளை வைத்து பிரச்சனைகளைத் தீர்க்க முயற்சிப்பர்.

எனவே பிரச்சனையைத் தீர்ப்பதில் பின்வரும் படிமுறைகளை கடைப்பிடித்தால் பிரயோசனமானதாக இருக்கும்.

**1. திறனாய்வுச் சிந்தனையை விருத்திசெய்தல்**

எப்போதும் நாம் பிரச்சனையின் ஆக்கக் கூறுகளைக் கண்டறிந்து, அவற்றை அறிவுபூர்வமாக சிந்திக்க வேண்டும். சில உணர்வுகளால் பிழையான தீர்மானங்கள் எடுத்து பெரும் சிக்கலில் மாட்டிக் கொண்டு விடுகின்றோம்.

**2. பிரச்சனை என்ன என்பதைக் கண்டு அவற்றை ஒழுங்கு முறையாக்கும் திறனை விருத்தி செய்தல்.**

ஒரு வழியில் மட்டுமல்லாது ஒரு பிரச்சனையின் தீர்வைப்பல வழியில் சிந்திக்க வேண்டும். பிரச்சனைகளை வெவ்வேறு கோணங்களில் அணுகினால் தீர்வுகளை பல வழிகளில் சிந்திக்கச் சாத்தியமாகின்றது.

# யதார்த்த வாத அரங்கு- 03
# சத்தியத்தின் முடிச்சில் சரணடைந்த நித்திய நாயகன்

ஆக்கம்: தமிழமுதன்
(ஜெயம் கிறிஸ்துராசா)
9ம் வட்டாரம் - புதுக்குடியிருப்பு

கிறிஸ்து இவ்வுலகிற்கு வருமுன் கடவுளோடு கடவுளாக இருந்தார். எந்நிலையிலும் என்றும் அவர் கடவுளே. இக்கடவுளுக்குரிய நிலையை விட்டுத் தம்மை வெறுமையாக்கி ஒன்றுமில்லாமல் அனைத்தையும் முற்று முழுதாகத் திறந்து மனுவுரு எடுத்து இவ்வுலகில் மனிதரானார். மனிதனுடைய இன்பம், துன்பம், கவலை, வேதனை அனைத்திலும் பங்குகொண்டார். இவ்வாறாக இவ்வுலகில் வாழ்ந்து மரித்தார். இவ் மரணம் கூட சிலுவைச் சாவாகவே அமைகின்றது. இதுவே இழிவின் கடைசி எல்லை, அவமானத்தின் உச்சக் கட்டம்.

சூசை, கிருஸ்ணன் இருவரும் உயிர் நண்பர்கள் ஆவார்கள். சூசை கத்தோலிக்க குடும்பத்தைச் சேர்ந்தவன். கிருஸ்ணன் இந்துக்குடும்பத்தைச் சேர்ந்தவன். ஆனால் சூசையை விட யேசு மீது தீவிர பக்தியுள்ளவன். வெள்ளிக் கிழமையன்று கிருஸ்ணன் சூசையைச் சந்தித்து டேய் இன்றைக்கு "சிலுவைப் பாதைக்கு" போனீயாடா? என்று கேட்டான். அதற்கு சூசை "இல்லையடா நான் மறந்திட்டன்" என்று கூறினான். கிருஸ்ணன் சற்று ஆத்திரமாய் அறிவுரையாக அவனுக்கு எங்கட தெய்வங்களை எடுத்து நோக்கினால் வாளோடும், சூலத்தோடும், வேலோடும், கதாயுதங்களோடும் நின்று அசூரர்களை அழித்தனர். ஆனால் உலகத்தில் உள்ள தெய்வங்களுள் யேசு மட்டும் எந்தவொரு ஆயுதங்களும் இல்லாமல் அன்பை மட்டுமே நிலையாகக் கொண்டு தன்னை இவ்வுலக மாந்தர் அனைவரிற்காகவும் சிலுவையிலே மரணமாகிய சரித்திர நாயகனின் கல்வாரிப் பயணத்தைத் தான் இந்த தவக்கால சிலுவைப்பாதை படம் பிடித்துக் காட்டுகிறது.

மனச்சாட்சியே இல்லாத கூட்டம் மரணத்தைக் கொடுத்தது. மனச்சாட்சி உள்ள தேவன் மரணத்தை ஏற்றார். போதனையைச் சொன்னவருக்கு வேதனையின் படலம் தொடர்ந்தது. இது சோதனையின் தீர்வல்ல, மரணத்தின் தீர்வு. அமர்த்தப்பட்டோர் பதவியில் அல்ல சிலுவையில் சுழல்கின்ற பூமியை தேறச்செய்வதற்காக தேர்தல் களத்திலே இவரிற்கு விழுந்த வாக்குகளோ "சிலுவையிலே அறையுங்கள், சிலுவையிலே அறையுங்கள்" முத்தான தேவன் சக்தியின்றி முதல்முறை விழும் நிலையானது முன்னாடி நின்ற நயவஞ்சகர்கள் முக்கி முக்கி சிரித்தனர். பால் வடிந்த முகம் பாழடைந்து கிடப்பதை பாசத் தாயவள் கண்டறிந்து பதறி பரிதவித்து இது பரம பிதாவின் சித்தமோ என்று தன்னைத் தேற்றி மகனை ஆற்றுப்படுத்தினாள். மூட்டை முடிச்சாய்க் கட்டிக் கொண்ட எம் பாவத்தினால் முள்ளாணி யேசுவின் தலையிலே விளையாடியது. முதலுதவி செய்வார் யாருமின்றி மூட்டு வலியோடு மூச்சு வாங்கினார். செய்கின்றார் உதவி சீமோன் இது செவ்வெனவே நடக்க ஏணியானது. திருமுகம் கரிமுகம் ஆனது, திருவுடல் சோமாலியர் ஆனது. தீர்வற்றுப்போகும் வேதனைப் படகு நடுவிலே திடீரென பெண் புகுந்து திருமுகத்தைத் துடைத்தாள். இறுதியில் திருக்காட்சியையும் கண்டாள் திட்டம் போட்டோரும், சட்டம் தீட்டினோரும் திகைத்து நிற்க, திருவாய் மலர்ந்தமுகம் திரையிலே தீச்சரமானது. அடிபட்டார், உதைபட்டார், அடைபட்டார், மூன்று முறை வீழ்ந்தும் மீண்டும் விரல் தொட்டு எழுந்தார். இது விதியா? அல்லது சதியா? என்பது அறியோம். கண்ணீர் விட்டுத்துடித்த மகளீர்களுக்கும் காய்ந்து விட்ட உள்ளங்களுக்கும், களைத்த தேகத்தோடு கருணையுள்ள தேவன் கனிமொழி கூறினார். ஆடையும் அடாவடித்தனத்தினால் பங்கிட்டு கச்சை மட்டும் மிச்சமாய் கிடந்தது. இது மனித குலமா? அல்லது மிருக குணமா? சிம்மாசனத்தைப் பறித்தாரா? அல்லது சரான சமூகத்தை சிதைத்தாரா? அல்லது சிறுவர்களை வெறுத்தாரா? இல்லையே... ஆனால் சீரழிந்த சமூகம் கிறிஸ்துவை சிலுவையிலே கொன்றார்களே. சோதனை அத்தனையும் தாங்கிய வேங்கை சிலுவையிலே உயிர் விட்டார். பரமனின் உடல் அன்னையின் மடியிலே வளர்த்தப்பட்டது. பெத்தமனசு உருகியது, கருகியது, அகிலத்தை அன்பால் ஆண்டவன் ஆறடிக் கிடங்கிலே அடக்கம் ஆனார். ஏனெனில் போதனையைச் சொன்ன வருக்கு வேதனையும் சோதனையும் பொறுமை தானே என்று நீண்ட அறிவுரையை கிருஸ்ணன் கூறினான்.

சூசையோ கண்ணீரோடு "டே கிருஸ்ணா நான் இனி ஒழுங்காக சிலுவைப் பாதைக்கு போவனடா யேசுவை அடிக்கடி தியானிப்பனடா" என்று மன முருகிச் சொன்னான்.

கிறிஸ்து தம்மைத் தாழ்த்தியமையால் கடவுளும் அவரை மிகவும் உயர்த்தி எப்பெயருக்கும் மேலான பெயரை அவருக்கு அருளினார். கிறிஸ்துவினுடைய அளவு கடந்த அன்புத் தியாகத்தின் நிமித்தம் கடவுள் எல்லாப் புகழையும் அவருக்களித்தார். இதனால் நாம் கிறிஸ்துவை கட்புலனாகாத கடவுளின் சாயல் என்றும் படைப்புக்களுக்கெல்லாம் தலைப்பேறு என்றும் விண்ணிலுள்ளவை மண்ணிலுள்ளவை கட்புலனாகுபவை கட்புலனாகாதவை அரியணையில் அமர்வோர் தலைமை தாங்குவோர் ஆட்சியாளர் அதிகாரம் கொண்டோர் ஆகிய அனைவரும் அவரால் படைக்கப்பட்டன. அவருக்காகவே படைக்கப்பட்டன என்றும் அனைத்திற்கும் முன்புள்ளார் என்றும் திருச்சபையாகிய உடலுக்குத் தலையும் தொடக்கமும் கிறிஸ்துவே என்றும் இறந்தவர்களிலிருந்து உயிர்த்தெழுந்த தலைப்பேறும் கிறிஸ்துவே என்றும் அழைக்கலானோம்.



# 'இரக்கத்தின் ஊற்று' அன்னை திரேசாவின் வாழ்வின் முக்கிய பக்கங்கள்





1996 நவம்பர் 16இல் அமெரிக்க ஜனாதிபதி பில் கிலின்டன் அமெரிக்காவின் கௌரவப் பிரஜையாகும் உரிமையை வழங்கினார். இதனை கல்கத்தாவில் வைத்து அமெரிக்கத் தூதுவர் பிராங்விஸ்னர் அன்னைக்கு வழங்கினார். அமெரிக்க வரலாற்றிலேயே அன்னையுடன் சேர்த்து ஐவருக்கே இந்த அதி உயர் கௌரவம் வழங்கப்பட்டுள்ளது.

☼ இதே ஆண்டு நவம்பர் 22இல் ஒழுங்கற்ற இருதயத் துடிப்பினால் மீண்டும் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். நவம்பர் 26இல் இருதய ஆராய்ச்சி நிலையத்துக்கு கொண்டு செல்லப்பட்டார். நவம்பர் 29இல் அங்கு வைத்து இருதய சத்திர சிகிச்சை இடம்பெற்றது. டிசம்பர் 01இல் அன்னையின் இருதய நுரையீரல், சிறுநீரகப் பிரச்சனைகள் சிறிது முன்னேற்றம் கண்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

☼ 1997இல் ஆண்டு மார்ச் 13 இல் பிராமண இந்துவாக இருந்து கத்தோலிக்க மதத்தை தழுவிய அருட்சகோதரி நீர்மலாவை சேவாச்சிரம் மிஷனரிகளின் தலைவியாக தெரிவு செய்ததன் மூலம் 50 வருடங்களாகத் தான் வகித்து வந்த தலைமைப் பதவியில் இருந்து அன்னை விலகிக்கொண்டார்.

☼ இந்த ஆண்டில் மே 16 இல் அன்னை இத்தாலிக்குச் சென்றார், தன்னுடன் புதிய தலைவி சகோதரி நீர்மலாவையும் அழைத்துச் சென்று உலகில் அவரை அறிமுகப்படுத்தினார். இரண்டு மாத சர்வதேசப் பயணத்தை ஆரம்பித்த அன்னைக்கு கோமாரி விமான நிலையத்தில் ஒட்சிசன் ஏற்றப்பட்டது. இது தான் அன்னை மேற்கொண்ட இறுதி வெளிநாட்டுப் பயணம் ஜூன் 18இல் இளவரசி டயானாவை நான்காவது தடவையாகச் சந்தித்தார். ஜூன் 29இல் திருத்தந்தையை இறுதியாகச் சந்தித்தார்.

தொடர்ச்சி அடுத்த இதழில் தொடரும்..

## அருளாளர் இரண்டாம்... (1ம் பக்கத் தொடர்ச்சி)

திருததந்தை இரண்டாம் ஜான் பாலின் இறப்பிற்கு பின் தற்போது தான் உரோம் நகரம் இத்தகையதோர் கூட்டத்தைக் காண்கிறது. திருப்பலிக்கும் இரண்டாம் ஜான் பாலின் இறப்பிற்கு பின் தற்போது தான் உரோம் நகரம் இத்தகையதோர் கூட்டத்தைக் காண்கிறது. திருப்பலிக்கும் இரண்டு மணி நேரம முன்பாகவே ஜெப வழிபாடுகள் துவங்கின. இந்த ஜெப வழி பாட்டில், திருத்தந்தை 2ம் ஜான் பால் பல்வேறு வேளைகளில் வழங்கிய உரைகளின் சில பகுதிகள் மொழி பெயர்ககப்பட்டு சில மொழிகளில் வாசிக்கப்பட்டன. ஆசிய மொழிகளில் தமிழ் மட்டுமே தேர்வு செய்யப்பட்டிருந்தது நமக்குப் பெருமை தானே. உலகின் முக்கிய மொழிகள், தொன்மை மொழிகள் என வழிபாட்டிற்குத் தேர்வு செய்யும் போது, திருப்பீடம் எப்போதும் தமிழையும் தேர்வு செய்வது வரலாறு கண்டு வரும் உண்மை.

# மகா ஞான ஒடுக்கம் – 2011

## உரும்பிராய் பங்கு
## 20 மாசி – பங்குனி 20

**உரும்பிராய் பங்கின் வளர்ச்சியையும், ஆனமீக புத்தெழுச்சியையும் நோக்கமாகக் கொண்டு அமலமரித் தியாகிகளின் மறையுரையர் குழுமத்தால் மிகப் பிரமாண்டமான முறையில் ஒழுங்குகள் செய்யப்பட்டு இம்மகாஞான ஒடுக்கம் சிறப்பாக நடந்தேறியது.**

**உரும்பிராய் பங்கின் புனித மிக்கேல் ஆலயம், புன்னாலைக் கட்டுவன் புனித பேதுருவானவர் ஆலயம், யூலனூர் புனித கென்றியரசர் ஆலயம், நீர்வேலி புனித விண்ணக அரசி ஆலயம் ஆகிய நான்கு ஆலயங்களையும் ஒன்றிணைத்து இம்மகா ஞானொடுக்க நிகழ்வுகள் நடாத்தப்பட்டன. கடந்த மாசி மாதம் 20ம் திகதி முதல் - பங்குனி 20ம் திகதி வரை நடைபெற்ற இந்த ஞான ஒடுக்கத்தில் பல்வேறு வகையான நிகழ்வுகள் நடந்தேறின.**

### ஆரம்ப நாள்



மகா ஞானொடுக்க ஆரம்ப நாள் நிகழ்வுகள் 20-02-2011 ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணிக்கு திருப்பலியுடன் ஆரம்பமானது. அன்றைய தினம் எமது மண்ணின் மைந்தன் அருட்பணி ஸ்ரலின் அடிகளார் தலைமைதாங்க மகா ஞானொடுக்க குருக்களுடன் எமது பங்குத்தந்தையும் இணைந்து திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

ஆலய முன் வீதியின் பெரிய வாயிலில் இருந்து குருக்கள் ஆராத்தி செய்து, மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர். பவனியாக வந்த குருக்களும் இறை மக்களும் ஆலய முன்றலில் ஒன்றுகூட மகா ஞானொடுக்க கொடி ஏற்றப்பட்டது. கொடியினை அருட்பணி தேவராஜ் (அமதி) ஏற்றி வைத்தார். அவ்வேளையில் மகா ஞானொடுக்க கீதம் பாடப்பட்டது. தொடர்ந்து திருப்பலி நிறைவேற்றப்பட்டது.

ஞானொடுக்கம் நடைபெறுகின்ற ஒரு மாத காலமும், பங்கின் செயற்பாடுகளை மகா ஞானொடுக்க குழுமத்தினரிடம் ஒப்படைக்கும் முகமாக ஆலய நற்கருணைப் பேழையின் திறப்பு, ஆயரின் அனுமதியுடன் பங்குத்தந்தை அவர்களால் ஞானொடுக்க குருக்களிடம் கையளிக்கப்பட்டது. பின்னர் ஏனைய 3 ஆலயங்களிலும் கொடிகள் ஏற்றப்பட்டு ஞானொடுக்கம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

### தினமும் திருப்பலி

இந்த ஒரு மாத காலமும் தினமும் திருப்பலிகள் இடம் பெற்றன. முதல் இரண்டு வாரங்களிலும், ஆலயத்தில் காலை 5.45 மணிக்கு ஒப்புக்கொடுக்கப் பட்டது. அடுத்த ஒரு வாரத்தில் வலயத் திருப்பலிகள் இடம்பெற்றன. இத் திருப்பலிகளில் அமதிகளின் பல குருக்கள் எம்மோடு இணைந்திருந்தனர். வலயத் திருப்பலிகளின் இறுதியில் அன்பியப் பகிர்வும், கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இறுதிவாரத்தில் நவநாட் திருப்பலியாக மாலை 5.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி நடைபெற்றன. இந் நவநாள் சிறுவர் தினம், இளையோர் தினம், குடும்ப தினம், முதியோர் தினம், குருக்கள் தினம், நோயாளர் தினம் (குணமாக்கல் வழிபாடும் இடம் பெற்றது), பாவமன்னிப்பு தினம் என சிறப்பிக்கப்பட்டது. நான்கு ஆலயங்களையும் சேர்ந்தோர் இந்த வழிபாடுகளில் ஒன்றாக இணைந்து சிறப்பித்தனர். நவ நாட்களில் குருக்களால் பாவசங்கீர்த்தனமும் கேட்கப்பட்டது. மனமாற்றத்தின் அடையாளமாக இறுதி நாளில் அதிகளவிலான இறை மக்கள் பாவசங்கீர்த்தனம் செய்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

இல்லத் தரிசிப்புக்கள்

ஒவ்வொரு ஆலயங்களிலுமுள்ள அனைத்து குடும்பங்களையும், அருட்பணியாளர்கள் சென்று சந்தித்து ஆசீரை வழங்கினர். இதன் போது பல குடும்ப பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன. முறிந்துபோன உறவுகள் பலவும் சீர்செய்யப்பட்டன. நீண்ட நாட்களாக அருட்சாதனங்களும் பெறாமல் இருந்த பலருக்கும் அருட்சாதனங்கள் வழங்கப்பட்டன. 76 திருமுழுக்கு அருட்சாதனங்களும், 37 திருமண அருட்சாதனங்களும், தகுந்த ஆயத்தத்துடன் ஒரே நாளில் நிறைவேற்றப்பட்டன. இந் நிகழ்வு புன்னாலைக்கட்டுவன் புனித பேதுருவானவர் ஆலயத்தில் நடைபெற்றது.

வலயத் திருப்பலிகளிலும், இல்லத்தரிசிப்புகளிலும்,



நவநாட் திருப்பலிகளிலும் இணைந்து கொண்ட குருக்கள்:

1. அருட்பணி எட்மன் மைக்கல் - அமதி
2. அருட்பணி வின்சென்ற் - அமதி
3. அருட்பணி ஜோண்பற்றிக் - அமதி
4. அருட்பணி தயாபெரேரா - அமதி
5. அருட்பணி மெனோபஸ்ரி - அமதி
6. அருப்பணி அன்ரனிபொன்ஜியன் - அமதி
7. அருட்பணி நேசராஜா - யா/மறைமாவட்டம்
8. அருட்பணி சகாயதாஸ் - யா/மறைமாவட்டம்
9. அருட்பணி றெக்ஸ்சவுந்தரா - யா/மறைமாவட்டம்
10. அருட்பணி யூயின் - யா/மறைமாவட்டம்

### இன்று ஒருவர்



அருட்பணி விமல் O.M.I அடிகளாரால் நடாத்தப்பட்ட இந்த நேர்காணல் நிகழ்வு தினமும் இரவு 8 மணி தொடங்கி 9 மணி வரை நடைபெற்றது. யாழ். கத்தோலிக்க திருச்சபையில் பல்துறை சார்ந்த அருட்பணியாளர்கள், பொது நிலையினர் கலந்து தமது கருத்துக்களைப் பகிர்ந்தனர். ஒலி பெருக்கியினூடாக ஒலிபரப்பப்பட்ட இநநிகழ்வில, பலரும் தொலைபேசியினூடாக இணைந்து தமது வினாக்களை தொடுத்தனர். அதற்கான விடைகள் மிகத்தெளிவாகவும், நேர்த்தியாகவும் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வு பலராலும் வரவேற்கப்பட்டு அதற்கு பல நல்ல விமர்சனங்களும் கிடைக்கப்பெற்றன. எம்மைச் சூழவுள்ள இந்துமத சகோதரர்கள் மத்தியில் இந் நிகழ்விற்கு பெரு வரவேற்பு கிடைத்தது.

இந் நிகழ்வோடு மாலை நேரங்களில் குறுந் திரைக்காட்சி (PROJECTOR) மூலம் படக்காட்சிகளும் காண்பிக்கப்பட்டன.

Ø நேர்காணல் நிகழ்வில் கலந்துகொண்டோர்

1. திரு. பேணாட் - பீடாதிபதி, வவுனியா கல்வியியற் கல்லூரி.
2. அருட்பணி டேமியன் - இயக்குனர், "அஞ்சலி அகம்" உள வளத்துணை நிலையம், பருத்தித்துறை.
3. அருட்பணி இராஜநாயகம் - இயக்குனர் "அகவொளி" குடும்ப உளவளத் துணையகம், யாழ்ப்பாணம்.
4. அருட்பணி ஜெயக்குமார் - முன்னாள் இயக்குனர் கியூடெக், பங்குத்தந்தை ஊர்காவற்துறை.
5. அருட்கலாநிதி கிருபாகரன் - விரிவுரையாளர், புனித பிரான்சிஸ் சேவியர் பெரிய குருமடம், யாழ்ப்பாணம்அருட்பணி. ஜெயசீலன் - விரிவுரையாளர், புனித பிரான்சிஸ் சேவியர் பெரிய குருமடம், யாழ்ப்பாணம்.
6. அருட்பணி ஜெயசீலன் - ஆசிரியர், தேவதாயின் குரல்.
7. அருட்பணி வின்சென்றப்பற்றிக் - இயக்குனர், "திருப்புமுனை" புது வாழ்வுப் பணியகம், மன்னார்.
8. அருட்பணி ஜெயசேகரம் - இயக்குனர், நெய்தலகம், யாழப்பாணம்.
9. அருட்பணி ரவிச்சந்திரன் - பொதுநிலையினர், இளைஞர்கள் அன்பிய ஆணைக்குழு.
10. திரு. ஜோண்சன்ராஜ்குமார் – உதவி இயக்குனர், திருமறைக் கலாமன்றம்.

### போட்டிகள்



மகா ஞானொடுக்க நாட்களில் பல போட்டிகள் நடாத்தப்பட்டன. மாணவர்கள், இளைஞர்கள், பெற்றோர்கள் என பலரும் இதில் பங்குபற்றி பயனடைந்தனர். கட்டுரை, கவிதை, பேச்சு, பாட்டு, ஓவியம், மனனம், வினாவிடை, மறையுரைப் போட்டி என்பன இடம் பெற்றன. இதில் வெற்றி பெற்றவர்களுக்கு இறுதிநாள் கலை விழாவின் போது பரிசில்கள் வழங்கப்பட்டன.

### சிலுவைப் பாதை சிந்தனை

தவக்கால 1ம் வெள்ளி சிலுவைப் பாதை 11-03-2011 அன்று புன்னாலைக் கட்டுவன் புனித பேதுருவானவர் ஆலய முன்றலில் நடைபெற்றது. இச் சிந்தனைகள் குறுந்திரைக் காட்சி (PROJECTOR) மூலமும் குறு நாடகக்காட்சி (ROLEPLAY) மூலமும் நான்கு நிலைகளில் மிக பக்திபூர்வமாக, அனைவரும் சிநதிக்கக் கூடியவாறு எளிமையான முறையில் வழங்கப்பட்டன.

அருட்பணி ஜோய் அமதி "ஜெத்சமெனி" எனும் 1ம் நிலையிலும், அருட்பணி ஜெயபாலன் அமதி "தீர்ப்பு" எனும் 2ம் நிலையிலும், அருட்பணி கிளேயர் அமதி "விழுகை" எனும் 3ம் நிலையிலும், அருட்பணி விமல் அமதி "இறப்பும் அடககமும்" எனும் 4ம் நிலையிலும் தமது ஆழமான மறைக் கருத்துக்களை வழங்கி, இச் சிலுவைப் பாதைச் சிந்தனைக்கு இன்னும் மெருகூட்டினர்.

### தூய மரியாளின் பேரணி


தூய மரியாளின் பேரணி மார்ச் மாதம் 4ம் திகதி மிக நீண்டதொரு வீதி வழியாக மிகவும் பிரமாண்டமான அளவில் (வலம் தந்தது) இடம் பெற்றது.

"மரியாள் பரிசுத்தமானவள்" எனும் கருப்பொருளில் சிந்தனைகள் வழங்கப்பட்டு நீர்வேலி தூய விண்ணக அரசி ஆலயத்திலிருந்து பிற்பகல் 3.00 மணிக்கு பேரணி புறப்பட்டு அச்செழு வீதி வழியாக யூலனூர் புனித கென்றியரசர் ஆலயத்தை வந்தடைந்தது. அங்கு "மரியாள் பரிந்து பேசும் தாய்" எனும் அன்னையுடைய உயரிய பண்பு சித்தரிக்கப்பட்டு, அங்கிருந்து புறப்பட்டு புன்னாலைக்கட்டுவன் புனித பேதுருவானவர் ஆலயத்தை வந் தடைந்தது. அங்கு "மரியாள் இறைவனின் தாய்" எனும் பொருளில் சிந்தனை வழங்கப்பட்டு மீண்டும் பலாலி வீதி வழியாக புனித மிக்கேல் ஆலயத்தை வந்தடைநதது. அங்கு திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. மறையுரையில் மரியாளைப் பற்றிய வினாக்களும், அதற்கான பதிலும் வழங்கப்பட்டன. இறுதியில் மாலை 9.30 மணியளவில் பிரியாவிடைச் செபமும் மரியன்னையின் திருச்சொரூப ஆசீரும் வழங்கப்பட்டது.

பேரணியின் வீதிகளில் திருச்செபமாலையுடன் பிராத்தனைகளும் சொல்லப்பட்டது, மரியன்னையின் பாடல்களும் பாடப்பட்டன. இதில் அருட்பணி விமலுடன் பாடகர் குழாமும் இணைந்து சிறப்பித்து பேரணியை பக்திபூர்வமாக்கினர்.



1. அருட்பணி ஜெயம்பிரான்ஸீஸ் - செபமாலைத்தாஸர் சபை
2. டாக்டர் திரு. அனரன் டாக்டர் திருமதி சுவேதா அன்ரன் - சமாதானத்திற்கும் நல்லிணககத்துக்குமான பணியகம் - யாழ்ப்பாணம்.





### அதிகாலை அருள்மழை

தினமும் அதிகாலை 5.00 மணிக்கு இந்நிகழ்வு நடைபெற்றது. அமதிகளின் பல அருட்பணியாளர்களால் வழங்கப்பட்ட அருமையான, அழகான இறை வார்த்தை சிந்தனைகளும், காலைச்செபமும் ஒலிபெருக்கியினூடாக மக்கள் மனதில் இடம பிடித்தது. இந்த அதிகாலை அருள்மழையானது, ஒவ்வொருவரையும் இறைவன் பால் ஈர்த்து, அருளால் நிறைத்து, அன்றைய நாளை மகிழ்வுடன் ஆரம்பிக்க துணைசெய்தது.

(தொடர்ச்சி 07ம் பக்கம்)

# மீட்புத்திட்டத்தில் கிறிஸ்துவோடு இணைந்திருந்தவரே புனித கன்னி மரியா

– அருட் சகோ. றமேஸ் அ.ம.தி –



கிறிஸ்துவின் மறையுடலாக விளங்கும் திருச்சபையானது, கிறிஸ்துவுக்கு மனுவுரு கொடுத்த அவரது அன்னைக்கு சிறப்பான இடம் கொடுத்து வணக்கம் செலுத்தி வருவது பேருண்மை. மரியாள் வணக்கம் பற்றி பலர் பலவாறு பல்வேறுபட்ட வடிவங்களில் விமர்சித்தாலும் இறைவனின் விருப்பத்தை எவராலும் மாற்றியமைக்க முடியாது. காலத்துக்கு காலம் திருச்சபையின் தலைவர்களாக பொறுப்பேற்ற பாப்புமார் மரியாள் என்னும் மறைபொருளையும், மீட்புத் திட்டத்தில் அவளது பங்களிப்பையும், செபமாலையின் உட் பொருளையும விசுவாசிகளுக்கு கற்பிக்கத் தவறவில்லை. புனித கன்னி மரியாளினமேல் திருச்சபை கொண்டுள்ள உள்ளாந்த பக்திப் பற்றுதலை வெளிப்படுத்தி, திருமறை வழிபாட்டில் அன்னைக்குரிய சிறப்பான தனி நிலையை திருத்தந்தை 6ம் சின்னப்பர் வெளியிட்ட 'மரியாளின் வணக்கம்' என்னும் சுற்றுமடல் சுட்டிநிற்கிறது. திருந்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பரின் 'மரியாள் ஆண்டு' அறிவிப்பு திருச்சபையில் மரியாள் ஊடாக செபிக்க வேண்டியதன் அவசியத்தை எமக்கு எடுத்துக்காட்டுகிறது.

திருமறைத் தந்தையர்களும், திருச்சபையோடு ஒன்றுபட்ட இறைவல்லுனர்களும், "மரியாள் துணையின்றி எந்த மனிதனும் ஈடேற்றம் அடைய முடியாது" என்று கற்பித்தனர். இறைவனின் மீட்புத்திட்டத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். அதாவது 'மனுவுருவான அந்த அன்பு மகனாலே, அவருடைய இரத்தத்தின் வழியாய் இறைவனின் அருள் வளத்திற்கேற்ப நாம் மீட்படைகிறோம்' (எபே 1:7). 'கடவுள் ஒருவரே. கடவுளையும் மனிதரையும் இணைப்பவரும் ஒருவரே. இவர் மனிதனான இயேசுக்கிறிஸ்துவே. இவர் அனைவரின் மீட்புக்காக தம்மையே கையளித்தார்' (1திமோ 2:5-6). ஆனால் அவர் இம் மீட்புத் திட்டத்தை நிறைவேற்ற மனுக்குலத்தின் பிரதிநிதியாக புனித மரியாளையே தேர்ந்து கொண்டார். மரியாளோ 'ஆகட்டும்' என்னும் வாக்குறுதியால் இறைவனுக்கு கீழும் அவருடனும் எல்லாம் வல்ல இறைவனின் அருளால் மீட்புத் திட்டத்தில் பங்கேற்றாள் என சங்கவுரை கூறுகிறது.

இறைவனின் நித்திய திட்டத்தில் மரியாளின் பொறுப்பு எத்தகையது என்பதைப் பற்றி திருத்தந்தை 10ம் பத்திநாதர் அழகாகக் கூறுகிறார். கன்னி மரியாளுக்கும் கிறிஸ்துவுக்கும் இடையே உள்ள மன ஒன்றிப்பு, பாடுகளின் ஒன்றிப்பு என்பவற்றால் மரியாள் கிறிஸ்துவோடு இணைந்து மனுக்குல மீட்புக்கு காரணமானாள். கிறிஸ்து தமது சொந்த இரத்தத்தை சிந்தி சம்பாதித்த பெறுபேறுகளை பகிர்ந்தளிப்பவளாக மரியாள் காட்சி தருகிறாள். ஆதலால் அவளே வரங்களை வளங்கும் முதல் பணியாளராகிறாள் என்கிறார் திருத்தந்தை. இவ்வாறு திருச்சபையின் தலைவர்களும் தந்தையர்களும் மரியாள் வணக்கத்தின் மேன்மையினையும், நாம் செபமாலை மூலமாக செபிக்க வேண்டியதன் தேவையினையும், முக்கியத்துவத்தினையும் எமக்கு கற்பிக்கிறார்கள். செபமாலையில் நாம் செபிக்கும் மறை நிகழ்சிகள் மீட்புத் திட்டத்தில் இறைமகன் இயேசுவின் வாழ்க்கையையே எமக்கு புலப்படுத்துகிறது. மேலாக செபமாலையின் மூலமாக மரியாளுடன் இணைந்து அருள் வாழ்வில் பங்கெடுக்க அவர்களது படிப்பினைகள் எம்மை அழைத்து நிற்கின்றன.

மரியாள் என்னும் மறை பொருள் இறைவனின் ஞானத்திலே அவரது மேலான திட்டத்திலே தோன்றியதொன்றாகும். இதன் உண்மைத் தன்மையை ஆழ்ந்த விதத்திலே சிந்தித்து அவற்றின் ஒளியில் நமது விசுவாச வாழ்வை கட்டியெழுப்புவது தான் மரியாள் வணக்கத்தின் நோக்கமாகும். எனவே மரியாள் வணக்கம் என்பது வெறும் உணர்ச்சி சம்மதந்தமான தொன்றல்ல. அவவாறிருப்பின் மரியாளை நாம் சரிவரப் புரிந்து கொள்ளவிலலை எனபதுதான் அர்த்தம். சிலவேளைகளில் மரியாள் வணக்கம் மிகைப்படுத்தப்படுவதுமுண்டு. கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாச வாழ்வில் நடுநாயகமாகத் திகழ்பவர் கிறிஸ்துவே. அவரது பாடுகள், மரணம், உயிர்ப்பு என்ற மறை பொருளில்தான் எமது கிறிஸ்தவ விசுவாசம் கட்டப்பட்டுள்ளது. இந்த மீட்பின் மறை பொருளை விளக்கிடும் வகையில் அதனுடன் இணைக்கப் பெற்றுத்தான் மரியாள் வணக்கம் வளர வேண்டும். இந்த உண்மையைத்தான் திருவிவிலியமும், திருச்சபை மரபும் எமக்கு எடுத்துரைக்கின்றன. மரியாள் பெற்றுக் கொண்ட பெருமைகளெல்லாம் மீட்பராம் கிறிஸ்துவை முன்னிட்டு இறைவன் அவளுக்கு தந்த சலுகைகளே. இவை யாவற்றையும் நன்கு விளங்கிக் கொண்டதனாலேயே திருத்தந்தை 2ம் அருளப்பர் சின்னப்பர் "அருள் வாழ்வில் மையமாக விளங்குபவள் புனித கன்னி மரியாள்" என அறிக்கையிடுகிறார். அவருடைய வழியில் அன்னையைப் பின்பற்றும் நாம்: அன்னையின் வாழ்வில் ஒளிர்விட்ட சிறந்த பண்புகளும் மதிபீடுகளும் எமது வாழ்விலும் உருவம் பெற நாம் அன்னையின் மூலமாக செபிக்க வேண்டும். வாழ்வின் அன்றாட பிரச்சினைகளையும், சவால்களையும் நம்பிக்கையோடு எதிர்கொள்ள செமாலை தியானம் எம்மை இட்டுச் செல்ல வேண்டும். இந்த மனநிலையோடு இம்மாதம் முழுவதும மரியாளுடன் இணைந்து இறைவனின் அருளை நாடுவோம்.

# அம்மாவைக் காண முடியுமா?..

அருட்பணி மா.றேஜிஸ் இராசநாயகம்



## முகவுரை

நம் நாட்டில் ஒரு ஆச்சரியமான, ஆனால் மகிழ்ச்சியான விடயம் கிறிஸ்தவர்களை மட்டுமல்லாது ஆயிரக் கணக்கான ஏனைய மதத்தினரையும் கவர்ந்திழுக்கும் தேவ தாயாரின் சக்தியாகும். ஒரு பெண் என்ற முறையில் பெண்கள் மரியாவுடன் ஒரு பண்பொருமைப்பாட்டைக் காண்கின்றனர். ஆண்களும் பெண்களும் ஒரு தாய் என்ற விதத்தில் அவரிடம் பெரிதும் ஈர்க்கப்படுகின்றனர். மரியா அனைத்துலகத் தாய். ஆகவே, அவரிடத்தில் மக்களுக்கு ஒரு தனிப்பட்ட, சில சமயம் உணர்ச்சிகரமான அன்பு உண்டு. தமிழ் நாட்டிலுள்ள வேளாங்கண்ணி, எமது நாட்டிலுள்ள, மடுத்திருப்பதி, தேவத்தை போன்ற திருத்தலங்கள் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்களைக் கவரும் இடங்களாயுள்ளன. வழக்கமாக வரும் ஆயிரக் கணக்கான ஏழைகளும் ஏதிலிகளும் செல்வந்தர்களும், தொழிலதிபர்களும் வர்க்க பேதங்களை மறந்து ஒன்றாக கூடி நின்று அன்னையை வணங்குவார்கள்.

## நவீன கால உளவியலாளரின் சான்று:

நவீன கால உளவீயலாளருள் செல்வாக்குமிக்க ஒரு வரான கார்ல் ஜுங் (Karl Jung) என்ற கிறிஸ்தவ சமயத்தவர் கிறிஸ்தவர் பரிசுத்த கன்னி மரியாயைத் தமது சமய அனு சாரங்களில் பின்நோக்கித் தள்ளி விட்டார்களென்றும், இதனால் வருந்தத்தக்க ஒரு பெரும் பிழையைச் செய்து தம்மை ஆன்மீக அனாதைகளாக்கி விட்டனர் என்றும் கவலைப்படுகிறார். எமது உடல், உள ஆன்மீக வளர்ச்சிக்கு ஒரு தாய் தேவை. வாழ்வில் எமது ஆன்மீக தாய்க்குரிய இடத்தை கனனி மரியா வகிக்கின்றார்.

## அம்மா வரவேண்டாம்:

புதிய பெந்திக்கோஸ்தே சபையினர் கன்னி மரியாவின் பக்தியைக் கடுமையாகத் தாக்கி வரும் இக்காலகட்டத்தில் பின் வரும் சம்பவத்தை நாம் மனதிற் கொளள வேண்டும். ஒரு இயேசு சபைக் குருவானவரின் தந்தை ஒரு கிறிஸ்தவருடன் நெருங்கிய நட்புக் கொண்டிருந்தார். அவர்கள் அடிக்கடி நட்புரிமையுடன் கன்னிமரியாவுக்கு கத்தோலிக்கர் செலுத்தும் வணக்கம் உட்பட, பல்வேறு மத சம்பந்தமான விடயங்களைப் பற்றி உரையாடுவது வழக்கம். அந்த நண்பர் தேவதாயின் பக்தியை மிகைப்படுத்தப்பட்ட ஒன்றாகவும் தப்பானதாகவும் கூடக் கருதினார். ஒரு நாள் அவர் தமது தாயுடன் கத்தோலிக்க நண்பரின் வீட்டுக்கு வந்தார். வழக்கம் போல அவர் அன்புடன் வரவேற்கப்பட்டார். ஆனால், அவர் வீட்டுக்குள் காலடி வைத்தபோது வீட்டுக்காரர் "நண்பரே, உம்மை நான் அன்புடன் வரவேற்கிறேன். ஆனால், தயவு செய்து உமது தாயாரை உள்ளே அழைத்துவர வேண்டாம்" என்று கூறினார். கிறிஸ்தவ நண்பருக்கு அவமானமாக இருந்தது. அவர் கோபத்துடன் "எனது தாயாரை என்னோடு வீட்டுக்குள் அனுமதிக்காவிட்டால் நானும் வரப்போவதில்லை" என்றார். கத்தோலிக்கரோ புன்னகையுடன் "உம்முடைய அம்மாவைத் தாராளமாக அழைத்து வாரும். அவர் வருவது எனக்கு மகிழ்ச்சியே. நான் ஒரு விடயத்தை சுட்டிக் காட்டத்தான் விரும்பினேன். நீர் வரலாம். ஆனால், உமது தாயார் வரக்கூடாது என்று சொன்னபோது நீர் அவமதிக்கப்பட்டதாகக் கருதினீர் அல்லவா? அதுவும் சரியே, நீர் இயேசுவை உமது வாழ்வில் வரவேற்று, அவரது தாயை வேண்டுமென்றே வெளியே விட்டால் இயேசுவுக்கு எப்படி இருக்கும என்று நினைக்கிறீர்?" என்றார். கிறிஸ்தவ நண்பர் இந்த நியாயத்தை ஏற்றுக் கொண்டார். தனது தாயாரை எமது வாழ்விலிருந்து நீக்கி விட்டால் இயேசு தாம் அவமதிககப்பட்டதாகவே கருதுவார்.

## அன்னை வழி ஆண்ட வரிடம:

இறைவனுக்கும் மனிதனுக்குமிடையே இருக்கும் ஒரே இடை நிலையாளர் இயேசுவை என்றும், இயேசு மூலமாக அல்லாமல் எவரும் தந்தையிடம் போக முடியாது என்றும் கிறிஸ்தவ சபையினர் கூறலாம். அவர்கள் கூறுவது சரியே. "மரியாவிடமிருந்து அறிமுகக் கடிதமில்லாமல் நாம் நேரே இயேசுவிடம் போக முடியாதா?" என்று அவர்கள் கேட்கலாம்.

அதற்கு விடை "ஆம், போக முடியும்". எனது தனிச் செபத்திலும் திருவழிபாட்டிலும் நாம் அடிக்கடி அவ்வாறு போகிறோம். ஆயினும், தூய கன்னி மரியாள் கிறிஸ்துவை அடைவதற்கு, தந்தையை அடைவதற்கு ஒரு சிறப்பான வழியாவார். அவர் நாம் இயேசுவைச் சந்திப்பதை இலகுவாககுகிறார்.

இறை மகனும் எமது மீட்பருமான இயேசு, எந்த இடையீட்டாளரும் இன்றியே ஒரு வளர்ந்த ஆளாக உலகுக்கு வந்திருக்கலாம். ஆயினும், தம்மை உலகிற்கு அளிக்க மரியாளைத் தேர்ந்தெடுத்தார். கன்னி மரியாளின் திருவயிறு என்னும் வாசல் வழியாகவே அவர் உலகிற்கு வந்தார். மரியாள் என்னும் அதே வாசல் வழியே சென்று இயேசுவைச் சந்திப்பதில் தவறென்ன? இயேசு மரியாளை அம்மா என்று அழைத்து அவரைக் கௌரவித்தார். நாமும் அவரை அன்னையென்று அழைக்க உரிமை தந்து எம்மைக் கௌரவித்தார்.

## மகிமைப்படுத்தப்பட்ட மரியா:

தமது ஒரே மகனும் எமது மீட்பருமான இயேசுவை உலகிற்கு அனுப்புவதற்கு முன் தந்தையானவர் தமது திருமகனுக்குத் தாயாக மரியாளைத் தேர்ந்தெடுத்து அவருடைய சம்மதத்தையும் கேட்டார். கடவுளுக்கு ஒரு மனித உடலையும் மனித ஆன்மாவையும் அளிப்பதில் மரியாளோடு ஒத்துழைத்து தூய ஆவியானவர் மரியாளைக் கௌரவித்தார். தூய ஆவியின் வல்லமையால் கன்னி மரியாளின் திருவயிற்றில் வார்த்தையானவர் மனிதனானார். தந்தை, மகன், தூயஆவி ஆகிய மூவரும் தெய்வீகத்தைத் தவிர்ந்த மிக உயர்ந்த கௌரவத்தை அளித்த மரியாளுக்கு விசேட வணக்கம் செலுத்துவதில் தவறென்ன இருக்க முடியும்?

## எனவே....

அவரைக் கௌரவிக்கும் சிறந்த வழிகளில் ஒன்று அவரைக் கண்டு பாவிப்பதாகும். அவர் எமக்கு சிறந்த முன்மாதிரியாக இருக்கிறார். அவரைக் கௌரவிக்கும் மற்றொரு சிறந்த வழி அவரிடம் செபிப்பதாகும். மரியாளுக்குரிய பல்வேறு பக்திமுயற்சிகளுள் செபமாலையே வரலாற்றில் சிறப்பிடம் பெற்றுள்ளது. போலியான இறையியல் போக்குகளாலும், வாழ்க்கை உலகமயமாக்கப்படுவதாலும், பொழுது போக்கு சாதனங்களை மேன்மேலும் தேடுவதாலும் அநேக கத்தோலிக்க இல்லங்களில் அவர்களது செப வாழ்விலிருந்து செபமாலை நீக்கப்பட்டு விட்டது.

செபமாலையின் மறை பொருள்கள் நற்செய்தி பற்றிய தியானங்களே. செபமாலையில் வாய்ச் செபமும் உண்டு, மனச்செபமும் உண்டு, எமது உடல், உள்ளம், கற்பனை அனைத்தையும் கொண்டு செபிக்கிறோம். "மலர்களோடு சொல்வது" என்று சொல்வார்கள். செபமாலை ஒரு ரோஜா மலர்ச் செண்டாகும். ஆகவே, அதைச் செபிக்கும் போது ரோஜா மலர்களோடு சொல்கிறீர்கள்.. "மரியாயே என் நல்ல தாயாரே, நான் உம்மை நேசிக்கிறேன்" என்று சொல்லுவோம். தாய்ப் பாசமுள்ள பிள்ளை, தவறினாலும் அழிந்து போகாது. தாய்க்கு அன்பு வற்றிப் போகுமோ? தனது பிள்ளை அவள் மறப்பாளோ?

# செய்யும் பணியை இறைபணியாக்குவோம்

அ. சியாமிளா
கொய்யாத்தோட்டம்

மே முதல் நாளை நாம் தொழிலாளர் தினமாக கொண்டாடுகின்றோம். இது தொழிலாளருக்கு மட்டுமான தினம் அல்ல. நாம் எல்லோருமே ஒவ்வொரு தொழில் நிலையில் இருக்கின்றோம். ஆகவே நாம் எல்லோரும் கொண்டாடும் தினமாகும். இன்று கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை பெருகி வரும் அதே வேளையில் வேலை இல்லாதவர்களின் எண்ணிக்கையும் பெருகிவருகிறது. இன்றைய காலத்தின் வேலைகள் எப்படிப்பட்டதெனில் பணம் சம்பாதித்து, சமூகத்தில் செல்வாக்கும் மதிப்பும் கிடைக்கும் வழியாகத்தான் அமைகிறது.

இயேசு வேதாகமத்தில் தொழிலைப் பற்றி மிக அழகாகக் கூறுகிறார். "என் தந்தை இன்றும் செயலாற்றுகிறார். நானும் செயலாற்றுகிறேன்" *(யோவா 5:17)*. ஒருவன் தான் செய்யும் தொழிலில் எப்போதுமே கவனமாய் இருக்க வேண்டுமென விளக்குகிறது.

இனறைய நவீன காலத்தில் வேலைகளிலே பல்வேறுபட்ட பிரச்சனைகள் காணப்படுகின்றன. உரிமைகள் பறிக்கப்படுவதோடு சலுகைகளும் மறுக்கப்படுகின்றன. இதற்காக வன்முறைகள், மறியல் போராட்டம் என கூறிக்கொண்டே போகலாம். ஏதேன் தோட்டத்தை பண்படுததவும், பாதுகாக்கவும் கடவுள் மனிதனை அங்கு குடியிருக்கச் செய்தார். *(தொ.நூ 2:15)* மண்ணுலகை பாதுகாக்கும் பொறுப்பை மனிதனுக்கு கொடுத்தார்.

ஆனால் நான் இன்று கடவுள் முன் ஏற்புடையோனாக இருக்கும் பணியாளாக வாழ்ந்து கொண்டிருக்கின்றேனா? நான் ஒரு விவசாயியாகவோ, ஆசிரியராகவோ, தொழிலதிபராகவோ, தொழிலாளியாகவோ, மருத்துவ நிபுணராகவோ, தாதியாகவோ, குடும்பத்தலைவன் தலைவியாகவோ, பிள்ளைகளாகவோ, அருட்சகோதரனாகவோ, அருட்சகோதரியாகவோ, பங்குத் தந்தையாகவோ, பொறியியல் வல்லுநராகவோ, காவல்துறையாகவோ, யாராக வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் நான் என் வேலையை கடவுளுக்கு ஏற்புடையதாக செய்து கொண்டிருக்கின்றேனா? நான் வெற்றி பெறும்போதும், என் உரிமைக்காக குரல்கொடுத்து போராடும் போதும், ஒவ்வொரு சலுகைகள் கிடைக்கும் போதும் நீதியோடும் நியாயத்தோடும் கடவுள் முன்னிலையில் பணி செய்கின்றேனா? ஆண்டவர் எனக்கு கொடுத்த பணியை இறைபணியாக காண்கிறேனா?

இன்று நாம் எல்லோரும் பிழைப்பிற்கான ஒரு வழியாகத் தான் வேலையைச் செய்து வருகின்றோம். வேலை செய்யும் இடங்களிலே இறை அன்பையும் இறைஉறவையும் பெற முடிகின்றதா? அதை நான் பகிர்ந்தளிக்கின்றேனா? என்னைப் படைத்து, ஒரு வேலை கொடுத்து அதனைச் செய்வதற்கான உடல் வலிமையைத் தந்தவர் கடவுள் தான். ஆகவே நான் அவ் இறை பணிக்காக பத்திலொரு பங்கை கொடுக்கின்றேனா?

அதற்காக மது தயாரிப்போர் போன்ற இழிவான தொழில் செய்வோர் தம் பணியை உயர்வாக கருதக்கூடாது. அது கடவுள் முன்னிலையில் ஏற்புடையதல்ல. அவ்வாறே செயயும் தொழிலில் ஊழல், ஏமாற்றுதல், இலஞ்சம் வாங்கல், திருட்டுத்தனம் செய்தல் ஆகியவையும் நேர்மையானவை அல்ல. ஆகவே செய்யும் பணிகளை இறைபணியாகக் காண்போம்.

வேலை செய்யும் போது நன்றி நிறைந்த மனதோடு அதில் ஈடுபட வேண்டும் என திருத்தூதர் பவுல் கூறுகிறார். *(கொலோ 3:17)* செய்யும் தொழில் எதுவாகினும் அதில் மேன்மையுண்டு என்பதை புரிந்து கொண்டால்தான் அவ்வாறான மனநிலை தோன்றும். ஆண்டவர் இயேசு புனித சூசையப்பருக்கு உதவியாக இருந்தார். திருத்தூதர் பவுல் கூடாரம் கட்டும் தொழிலைச் செய்தார். செபத்தியானம், மறைக்கல்வி, பக்தி முயற்சிகள், நோயாளருக்கு உதவுதல், கல்வி, பல்சமய நல்லுறவு இவ்வாறான பணிகளில் நான் ஈடுபடுகின்றேனா?

பல பங்குகளில் இளையோரது பணிகள் தேவைப்படுகிறன. பங்குகளில் குருவானவரோடு சேர்ந்து பணிசெய்வது அரிதாகவே காணப்படுகிறது. பணிகளை முன்வந்து செய்ய தயக்கம் காட்டுவது ஏன்? இது எமது பணியல்ல பங்குத் தந்தை பார்த்துக் கொள்வார் என ஒதுக்ங்கிச் செல்வது ஏன்?

தொழில் புரிந்து அதனால் கிடைக்கும் வருமானம் பலருக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறது. ஆனாலும் இறைவனோடு இணைந்து செய்யும் பணியே கூடுதல் நிறைவையும் மகிழ்ச்சியையும் கொடுக்க கூடியது.

ஆகவே நாம் நமது வாழ்க்கையை ஆன்மீக மயப்படுத்தி செய்யும் பணியை இறைபணியாக்கி கடவுள் முன்னிலையில் ஏற்புடைய பணியாளர்களாக வாழ்வோம்.

## சிந்தனைக்கு... தன்னம்பிக்கை

✝ "பக்தி முயற்சிகளைத் திரும்பவும் கடைப்பிடிக்க முயலும்போது உனது தன்னம்பிக்கை அதிகரிக்கும்.

# கவிதைச் சாரம்

## உழைப்பின் பெருமை

உழைப்பினது உயர்வினை
உள்ளமதால் போற்றுதற்கு
உலகமது உயர்கொடையாய்
உவந்திருக்கும் இந்நாளில்
உழைப்பவரைப் போற்றிடுவோம்
உணர்ந்திடுவோம் அவர் வாழ்வை
உரைத்திடுவோம் சமத்துவத்தை
உணர்த்திடுவோம் உலகினிற்கு

பாடி வரும் பாட்டாளிகள்
படுகுழியில் வீழுவதேன்?
கூடி வரும் தேனீக்கள்
கூடுகளை இழப்பதுமேன்?
ஓடி வரும் மனிதர்களை
சாதி சொல்லி தடுப்பதேன்?
நாடி வரும் இறையடியாரை
மத வெறிக்குள் தள்ளுவதேன்?

இடி இடித்த மனிதனுக்கு
கொடிய துன்பம் வருவதேன்?
அடி எடுத்து வைக்க இடம்
தடுத்து மனம் கறுப்பதேன்?

குடி கெடுக்க நினைப்பவர்கள்
முடி எடுக்க நினைப்பதேன்?
படி கொடுக்க இறைவனவன்
கொடி அசைக்க மறப்பதேன்?

சீதனத்தை உயர் மட்டம்
சிந்திக்க மறுப்பதேன்?
ஏதனத்தில் ஏறி நின்று
ஏழைகளை வருத்துவதேன்?
நூதனத்தில் வளர்ந்து கொண்டும்
நுண்ணறிவை மறப்பதேன்?
மேதினத்தில் மேடையேறி
மெய் மறந்து பேசுவதேன்?

உழைப்பார் நாளும் உயர்வடைவார்
மற்றவர் வாழ்வில் தாழ்வடைவார்
உரைத்தனர் ஆன்றோர் நல்லொழுக்கம்
மந்திரமாக அன்றொரு நாள்
உதரம் நிரப்ப உதிரம் சிந்தும்
உன்னத மாந்தரை நாள்தோறும்
உளமாரப் போற்றி உவப்புடனே
உழைப்பின் பெருமையை சாற்றிடுவோம்

அருட்சகோ. றமேஸ்
அ.ம.தி



## கடவுள் வடித்த கண்ணீர்



கடவுள் வடித்த கண்ணீர் - அதைக்
கண்ணாரக் கண்டேன் சில நாள் முன்
கதிரையில் நான் அங்கு இல்லை - அந்தக்
கல்வாரி மலையில் தான் நின்றேன்

அழுத முகத்தோடு அங்கே - அன்னை
மரியாள்தான் என் அருகே நின்றாள்
தொழுது அவள் காலில் வீழ்ந்தேன் - அவள்
துயரில் நான் பங்கு கொண்டேன்

வயதில் இளையவர் ஒருவர் - அன்னை
மரியாளின் பக்கத்தில் நின்றார்
அவர்தான் அருளப்பர் என்றார் - எந்தன்
கரம் கூப்பி அவரையும் தொழுதேன்

சிலுவையில் தொங்கிய யேசு
"இதோ உன் தாய்" என்று சொன்னார்
"என்னையோ?" என்று நான் பார்த்தேன்
ஆசைக்கும் அளவுண்டு அல்லவா?

இறைமகன் தலைசாயும் நேரம் - நான்
என்னையும் அறியாமல் கதறிவிட்டேன்
மண்டபம் என்பதை மறந்துவிட்டேன் - என்மகன்
"அம்மா!" என்றென் தோளைப் பற்றும்வரை

ஈடில்லா இயக்குனர் தந்தையுடன்
இணைந்தே கை கொடுக்கும் ராஜ்குமாரை
யேசுவாய் மாறிய காவிய நாயகனை
நெஞ்சில் சுமந்தபடி வெளியே வந்தேன்.

"நாவாலியூர் நாயகி"

## அருட்பணி சறத்ஜீவன்... (2ம் பக்கத் தொடர்ச்சி)

யுத்தம் இறுதிக் கட்டத்தை அண்மித்த அந்த இறுதி நாள்களில் மரணபயம் எல்லோரையும் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தை கண்டு இவர் அஞ்சவில்லை. மரணத்திலும் உறுதியாக இருந்தார். நாற்புறமும் இராணுவம் சூழ்ந்து நின்ற வேளையிலும் மரணத்தை கண்டு இவர் அஞ்சவில்லை. மரணத்திலும் உறுதியாக இருந்தார். நாற்புறமும் இராணுவம் சூழ்ந்து நின்ற வேளையில் தங்களுக்கு கொடுககப்பட்ட அறிவுறுத்தலின் படி 2009 மே மாதம் 17ம் திகதி மாலை வேளையில் இரண்டு குருக்களோடும் ஒரு சில பிளளைகளோடும் வெள்ளைக் கொடியுடன் இரண்டு தடவைகள் சம கால இடைவெளியில் இராணுவததினரை எதிர்கொண்டு செல்ல முற்பட்ட போது இவர்களை நோக்கி துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. இறுதியாக 18ம் திகதி காலை வேளையில் மீண்டும் ஒரு தடவை வெள்ளைக் கொடியுடன் இராணுவத்தை எதிர் கொளள முயற்சித்த போது இவரும் துணிவுடன் அநத முயற்சியில் ஈடுபட்டார். "தன் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதை விட மேலான அனபு எதுவுமில்லை" *யோ 15:13* என்கின்ற இறைவார்த்தை அவரது உள்ளத்தில் ஓங்கி ஒலித்ததன் பிரதிபலிப்பு இந்த சம்பவத்தில் நிருபணமாகியது. இறுதியாக இந்த முயற்சி வெற்றியடைந்தது.

அங்கு இருந்தவர்கள் விசாரணை செய்யப்பட்டவிதம், இவர் தாக்கப்பட்ட சம்பவம் போராட்டத்தின் எதிர்பாராத அந்த முடிவு இவரது மனதில் ஆழமான பாதிப்பை ஏற்படுத்தியது. இவைகள் எல்லாவற்றினதும் தாக்கம் இவரது இதயத் துடிப்பை படிப்படியாக குறைத்திருக்க வேண்டும். எரியும் சுவாலைகளுக்கு மத்தியில் வெறுங்காலுடன் பல நூறு மீட்டர் மனப்பாரத்தோடு நடந்த இவரது உடல் படிப்படியாக சோரத் தொடங்கியது. இவர் சுமந்து வநத பொருட்களடங்கிய இரணடு பொதிகளை இவருடன் வந்த ஒருவர் பெற்றுக் கொள்ள இன்னும் இரணடு பிள்ளைகள் இவரை கைத்தாங்கலாக சுமக்க முற்பட்ட போது அவர் கூறிய "என்னால் முடியும் நான் தனிய நடந்து வருவேன்" என்ற வார்த்தைகள் இறுதி நேரத்திலும் இவரது மன உறுதியை காட்டி நின்றது. நீங்கள் எங்கள் அடிமைகள் என்று அங்கு ஒலித்த ஏளன குரல்களுக்கு மத்தியில் நண்பகல் 12.30 மணியளவில் இரட்டை வாய்க்கால் என்கின்ற இடத்தில் இவரது உடலின் இசைவாக்கம் படிப்படியாக குறைந்து போக இன்னும் சிலருடன் பல பிரயத்தனங்களுக்கு மத்தியில் ஓர் உழவு இயந்திரத்தில் இவரும் ஏற்றப்பட்டு சாளம்பர் என்ற இடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு மதியம் 2.45 மணிக்கு அவரது இதயமும் தனது துடிப்பை நிறுத்த கனத்த இதயத்தோடு இவ்வுலகை விட்டு அகன்று போனார்.

அருட்பணி சறத் ஜீவன் குருத்துவத்தில் புதியதோர் அத்தியாயம். இறை நம்பிக்கையில் வேர் ஊன்றி மரியன்னையின் பராமரிப்பில் இறைபணி புரிந்த ஓர் இறைபணியாளன். மக்கள் பணி புரிந்து புன் சிரிப்புடன் மக்கள் மனதில் இடம் பிடித்த ஒரு மாமனிதன். வரலாற்றில் உன் தடங்கள் அழியாமல் என்றும் நிலைத்திருக்கும்.

அருட்பணி. ஸ்ரீபன்

## காவலன் வாசக நேயர்களுக்கு..

வைகாசி 22-05-2011 வெளிவரும் இதழானது அமலமரி தியாகிகள் சபை ஸ்தாபகரான புனித இயூஜின் டீ மசனட் அவர்கள் இறை பதம் அடைந்த 150வது வருட நிறைவு நினைவு இதழாக வெளிவரும் என பதை அறியததருகின்றோம்..

## 2ம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் : 18-02-1949
ஆண்டவன் அடியில் : 23-04-2009

தவசி குளம் - மிருசுவில்

அமரர் திருமதி
யோசெப் மரியநாயகம் மேரிபிலோமினா

"நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடமாட்டேன் உங்களிடம் திரும்பி வருவேன்" (யோவான் 14:18)

பாசமெனும் அமுதமூட்டி பாரிலெமை வளர்த்தவளே
நீசமது உனக்கு வந்து நீ பிரிந்து போனதனால்
வேசமான உலகுதனில் வேகுதம்மா எங்கள் நெஞ்சம்
ஆசையோடு உன்னைக் கண்டு
ஆண்டு இரண்டாகிடினும்
இயேசுவுடன் நீயிருப்பாய்
இதயமதில் அமைதி கொள்வோம்!

உங்கள் பிரிவால் வாடும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Advt-34/11



## பதினொராம் ஆண்டு நினைவஞ்சலி



"அவர் தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்"

எம் ஆழ் மனக்காயங்களைக் குணமாக்கும் தெய்வீக மருந்து வரே! உமது அளவில்லாத பேரிரக்கத்தை முன்னிட்டு, உமது அடி வந்திருக்கும் எம் குடும்பத் தலைவர்களின் ஆன் மாக்களுக்கு நித்திய இளைப பாற்றியையும் முடிவில்லா பேரின்ப பிரகாசத்தையும் அளித்தருளும்.



**மனுவேற்பிள்ளை குணரட்ணம்**

அன்னை மடியில்
1947-01-31
ஆண்டவன் அடியில்
2000-05-11



**குணரட்ணம் நிறோஜன்**

அன்னை மடியில்
1982-02-15
ஆண்டவன் அடியில்
2000-05-11

பண்டத்தரிப்பு
(பெரியவிளான்)

Advt-37/11

என்றும் உங்கள்
நினைவுகளை சுமந்தபடி
குடும்பத்தினர்.


# மகா ஞான ஒடுக்கம் ... (4ம் பக்கத் தொடர்ச்சி)

## நற்கருணை வழிபாடும், நற்கருணைப் பேரணியும்

நற்கருணை வழிபாடுகள் தினமும் பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற்றன. நற்கருணை எழுந்தேற்றம் செய்யப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றன. இறுதியில் நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டது. வழிபாடுகளில் குருக்களோடு ஒவ்வொரு அன்பியங்களும் இணைந்து ஒவ்வொரு நாளையும் சிறப்பித்தன.



நற்கருணை வழிபாடு 05-03-11 அன்று யூலனூர் புனித கென்றியரசர் ஆலயத்தில் நடைபெற்றது. மகா ஞானொடுக்க குருக்களுடன் தியாக்கோன் லெபோன் அவர்களும் இணைந்து சிறப்பித்தார்.

மகா ஞானொடுக்கத்தின் முக்கிய நிகழ்வான நற்கருணைப் பேரணி 12-03-11 அன்று சனிக்கிழமை நடைபெற்றது. புனித மிக்கேல் ஆலயத்தைச் சூழவுள்ள மிக நீண்டதொரு வீதியினூடாக நற்கருணை நாதர் வலம் வந்து எம் பங்கை ஆசீர்வதித்தார்.

பேரணி பாதையில் நான்கு நிலைகளில் அன்பே நற்கருணை, பகிர்வே நற்கருணை, சமத்துவமே நற்கருணை, தியாகமே நற்கருணை எனும் கருப்பொருளில் பீடங்கள் அமைக்கப்பட்டது. ஒவ்வொரு நிலைகளிலும் திவ்விய நற்கருணை ஆராத்தி செய்யப்பட்டு, அதனைத் தொடர்ந்து வாசகமும், மறையுரையும், நற்கருணை ஆசீரும் வழங்கப்பட்டது, இறுதி ஆசீர் "தியாகமே நற்கருணை" எனும் கருவில் ஆலய முன்றலில் இடம் பெற்றது. இப்பேரணியிலும் பல குருக்கள் கலந்து சிறபபித்தனர்.

கலந்து கொண்ட குருக்கள் (நற்கருணைப் பேரணி).

1. அருட்பணி விஜிந்திரன் அமதி
2. அருட்பணி அருள்ராஜ் அமலதாஜ் - அமதி
3. அருட்பணி அந்தோனிமுத்து-அமதி
4. அருட்பணி வின்சென்ற் - அமதி
5. அருட்பணி மனுவல்-நற்கருணைநாதர் சபை
6. அருட்பணி அன்ரனிதாஸ் - யா/ மறைமாவட்டம்.
7. அருட்பணி அன்ரன்ஜோர்ஜ் - யா/ மறைமாவட்டம்.
8. அருட்பணி சந்திரபோஸ் - யா/ மறைமாவட்டம்
9. அருட்பணி யேசுதாஸ் - அதிபர், சென் கென்றிஸ் கல்லூரி.





## கருத்தமர்வுகள்

ஆன்மீக நிகழ்வுகள் பலவற்றோடுகருத்தமர்வுகளும் இடம்பெற்றன. சிறுவர்கள், இளையோர்கள், பெற்றோர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள், மறையாசிரியர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள், பக்தி சபைகள் என பல பிரிவினருக்கும் நடாத்தப்பட்டது. ஆன்மீகத்தை ஆழமாக்கி ஒவ்வொருவரின் தனிப்பட்ட வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும், தேவையான பல விடயங்கள் இக்கருத்தமர்வுகளில பகிரப்பட்டன. பல வளவாளர்கள் கருத்துக்களை வழங்க அநேகர் இதில் கலந்து பயன் பெற்றனர்.

**வளவாளர்கள்:**

1. திரு. பேணாட் - பீடாதிபதி, வவுனியா கல்வியியற் கல்லூரி
2. திரு. அநதோனிப்பிள்ளை - மறையாசிரியர்
3. திரு. ஜோசவ்பாலா - கியூடெக்
4. அருட்பணி இராஜநாயகம் - அகவொளி இயக்குனர்.
5. அருட்பணிறெஜிஇராஜேஸ்வரன் - இயக்குனர், மரியாயின் சேனை யாழ்ப்பாணம்.

# இறுதி நாள்



மகா ஞானொடுக்கத்தின் இறுதிநாள் நிகழ்வுகள் 20-03-11 அன்று நடைபெற்றது. அன்றைய தினம் காலை 7.00 திருப்பலியும, மாலை 6.00 மணிக்கு கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன. யாழ். ஆயர் அதி வணக்கத்துக்குரிய தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை திருப்பலிக்கு தலைமை தாங்கினார். அவருடன் அமதிகளின மாகாண முதல்வர் அருட்பணி போல்நட்சத்திரம், அருட்பணி லொஸிங்ரன் அமதி, அருட்பணி ஸ்ரலின், எமது பங்குத் தந்தை யூட்நிக்ஸன் அடிகளாரும், மகா ஞானொடுக்க குருக்களும் இணைந்து சிறப்பித்தனர்.

ஆலய முன் வீதியிலிருநது பாண்ட் இசை முழங்க ஆயரும் குருக்களும் பவனியாக வரவேற்கப்பட்டனர். தொடர்ந்து திருப்பலியில் ஆயர் தமது மறையுரையில் மனம் மாறியவர்கள் என்பதை நாம் ஒவ்வொருவரும் எமது செயல்களினால் காட்ட வேண்டும் என்றும், சுவாமி ஞானபிரகாசர் விதைத்த விதையைத்தான் நாம் இன்று அறுவடை செய்கின்றோம் என்றும் கூறி மூன்று கோரிக்கைகளை முன் வைத்தார். எம் பங்கிலிருந்தும் தேவ அழைத்தல்களை ஊக்குவிக்க வேண்டும். நற்செய்தி பணியை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். எம் மிடையே நற்கருணைப் பணியாளர்களை விரைவில் உருவாக்க வேண்டும் என்பதே அவையாகும்.



மறையுரையின் பின்னர் மகா ஞானொடுக்க சிலுவைகள் கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் மகா ஞானொடுக்கத்தின் நினைவாக நான்கு சிலுவைகள் நான்கு ஆலயங்களுக்கும் வழங்கப்படடன. ஒவ்வொரு ஆலயங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுடன் நான்கு மகா ஞானொடுக்க குருக்களும் இணைந்து திருச்சிலுவையை பீடத்திக்கு பவனியாகக் கொண்டு வந்தனர்.

ஆயர் அவர்களால் சிலுவைகள் ஆசீர்வதிக்கப்பட்டு பங்குத்தந்தையிடம் ஒப்படைக்கப்பட்டன. பின் இறைமக்கள் அனைவரும் சிலுவைகளை நோக்கி கரங்களை நீட்டி உறுதிமொழி எடுத்தனர். அருட்பணி கிளேயர் முன்னின்று உறுதிமொழியை வழங்கினார். தொடர்ந்து திருப்பலி வழமை போல் நடைபெற்றது.

நன்றியுரையினை, மகா ஞானொடுக்க குருக்கள் சார்பில் அருட்பணி ஜெயபாலன் அமதி வழங்க, பங்கின் சார்பில் பங்குத்தந்தை அவர்கள் வழங்கினார். பின்னர் பாப்பரசரின் சிறப்பு ஆசீர்வாதம் (Papal Blessing) ஆயரினால் வழங்கப்பட்டது. தொடர்ந்து மகா ஞானொடுக்க மறையுரையர்களின் ஆசீர்வாதம் (Blessing by the Preachers with Oblate Cross) வழங்கப்பட்டது. இறுதியாக ஞானொடுக்க கொடி இறக்கப்பட்டு காலை நிகழ்வுகள் நிறைவுபெற்றன.

## கலை நிகழ்வுகள்

மகா ஞானொடுக்க நிகழ்வுகளில் இறுதியாக கலை நிகழ்வுகள் 20-03-11 மாலை 6.00 மணிக்கு ஆரம்பமானது. பிரதம விருந்தினராக அமதிகளின் யாழ் மாகாண முதல்வரும, எமது மண்ணின் மைந்தனுமான அருட்பணி போல்நட்சத்திரம் அடிகளாரும் சிறப்பு விருந்தினராக அருட்பணி ஸ்ரலின் அடிகளும் இவர்களுடன் அருட்பணி லொஸிங்ரன் அமதி அடிகளாரும் கலந்து சிறப்பித்தனர், அருட்பணி தேவராஜ் அமதி அவர்கள் தலைமை தாங்கி இக்கலை விழாவினை ஆரம்பித்து வைத்தார்.

நான்கு ஆலயங்களிலிருந்தும் நடனம், விலலுப்பாட்டு, நாடகம் என பல்வேறு தரமான நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டு மேடையேற்றப்பட்டன. இதில் சிறுவர்கள் தொடங்கி பெரியவர்கள் வரை பங்குபற்றி சிறப்பித்தனர். கலை நிகழ்வுகளுக்கிடையில் விருந்தினர்களின் உரையும், பரிசில் வழங்கும் நிகழ்வும் இடம்பெற்றன. இந்நிகழ்வோடு மகா ஞானொடுக்க நிகழ்வுகள் யாவும் நிறைவு பெற்றன.





பொதுசன

# "கத்தோலிக்க திருமறைக் கல்வித் தேர்வில் உயர் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் விபரம் – 2010"

யாழ். மறைமாவட்டம்

| தரம் | பாடசாலை | மாணவர்கள் பெயர் | பெற்ற புள்ளி | இடம் |
|---|---|---|---|---|
| 03 | யா/கோப்பாய் தெற்கு றோ.க.த.பா | ஜெயக்குமார் ஜெனிஸ்ரன் | 100 | 1ம் இடம் |
| 03 | யா/புங்குடுதீவு றோ.க.த.க.பா | கி. டிஷானி | 99 | 2ம் இடம் |
| 03 | யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி | அன்ரனிதாஸ் சபேஸ்ரா | 98 | 3ம் இடம் |
| 04 | யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தி | ஜ. அனோஜியஸ் | 99 | 1ம் இடம் |
| 04 | யா/நெடுந்தீவு றோ.க. மகளீர் கல்லூரி | ம. பிரியதர்சினி | 98 | 2ம் இடம் |
| 04 | யா/பண். யசிந்தா றோ.க. வித்தி | அ. அனற் சாருகா | 97 | 3ம் இடம் |
| 05 | யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தி | தே. தீபனா | 98 | 1ம் இடம் |
| 05 | யா/புனித ஜோண் பொஸ்கோ வித்தி | அ. மாறியோ டில்ஷான் | 97 | 2ம் இடம் |
| 05 | யா/புனித பத்திரிசியார் கல்லூரி | அ. ஆர்னோல்ட் வில்ரன் | 96 | 3ம் இடம் |
| 06 | யா/புனித பத்திரிசியார் கல்லூரி | அ. கிளிங்ரன் | 98 | 1ம் இடம் |
| 06 | யா/வேம்படி மகளீர் உயர்தரக் கல்லூரி | ஞானப்பிரகாசம் ஆன்சிகா | 97 | 2ம் இடம் |
| 06 | யா/வேம்படி மகளீர் உயர்தரக் கல்லூரி | ரூபநாதன் அனற் அபிஷா | 96 | 3ம் இடம் |
| 07 | யா/புனித திரேசாள் மகளீர் கல்லூரி | சிவபாக்கியநாதன் அர்பனா | 84 | 1ம் இடம் |
| 07 | யா/புனித பத்திரிசியார் கல்லூரி | த. மரியதர்சன் | 83 | 2ம் இடம் |
| 07 | யா/திருக்குடும்பக் கன்னியர் மடம் ம.வி | மரியதாசன் மரியறேச்சல் | 82 | 3ம் இடம் |
| 08 | யா/ஊர். புனித மரியாள் றோ.க.பா | ராசதுரை நிரோஜா | 98 | 1ம் இடம் |
| 08 | யா/இளவாலை கன்னியர் ம.வி | பீற்றர் ஜீன்செளமியா | 97 | 2ம் இடம் |
| 08 | யா/கரம்பொன் சிறிய புஸ்பம் ம.வி | யூட்குமார் தனுஜா | 96 | 3ம் இடம் |
| 09 | யா/வேம்படி மகளீர் உயர்தரக் கல்லூரி | அன்ரன் நிக்கலின் ஸ்ரனிஷா | 98 | 1ம் இடம் |
| 09 | யா/பரு. தோமஸ் றோ. பெண்கள் / பா | வி. சோபியா | 93 | 2ம் இடம் |
| 09 | யா/பரு. மெதடிஸ்த உயர்தரப் / பா | வின்சன் டிபோல் சோபனா | 89 | 3ம் இடம் |
| 10 | யா/சில்லாலை றோ.க.த.க / பா | அ. மேரி மெல்சியா | 95 | 1ம் இடம் |
| 10 | யா/சில்லாலை றோ.க.த.க / பா | யோ.பி.டன்ரன் ஜெயக்குமார் | 94 | 2ம் இடம் |
| 10 | யா/வேம்படி மகளீர் உயர்தரக் கல்லூரி | இக்னேசியஸ் அனோஷா | 93 | 3ம் இடம் |
| 11 | யா/வேம்படி மகளீர் உயர்தரக் கல்லூரி | அ.வி.ம. ஆன் வின்சலா | 95 | 1ம் இடம் |
| 11 | யா/புனித பத்திரிசியார் கல்லூரி | அ. அன்ரனிசீலன் | 87 | 2ம் இடம் |
| 11 | யா/இளவாலை கன்னியர் மகாவித்தி | யஸ்ரின் டெல்சி | 85 | 3ம் இடம் |

இயக்குநர்: நிலையப் பணிப்பாளர்

திரு.இ.ம.ஜெயசீலன் - பரீட்சை இணைப்பாளர்.

# "மாணவர்களிடையே வாசிக்கும் ஆர்வம் குறைவுபடுவது கவலையளிக்கிறது"

**அதிபர்: அருட்பணி. J.A. யேசுதாஸ்**

இன்றைய உலகில் தொடர்புசாதன வசதிகள் அதிகரிக்க பாடசாலை மாணவர்களிடையே பலநூல்களைத் தேடிக் கற்கும் ஆர்வமும், அதற்கென ஒரு நேரத்தை வகுத்துக்கொள்வதும, தேடிக்கற்கும் நூல்களில் உள்ள தகவல்களை, செய்திகளை தமது சுய ஆக்கங்களாக உருவாக்கி நூல்களாக வெளியீடு செய்து, பாதுகாத்து அவற்றை எதிர்காலத் தலைமுறையினருக்குக் கையளிக்கும் பொறுபுடைமையும் மிகவும் அருகிச் செல்கின்றமை உண்மையிலேயே கவலையளிக்கும் விடயமாகவே உள்ளது.

எனவே இந்நிலைமையைத் தற்கால மாணவ சமூகம் நன்குணர்ந்து, தமது பன்முகப் படுத்தப்பட்ட ஆற்றல்கள், திறமைகளை வளர்க்கும் முகமாக கற்றலுக்கு உகந்த நூல்களைத் தேடிக் கற்பதும் அவற்றிலிருந்து பெறும் தகவல்களின் அடிப்படையில், தமது சுயஆக்கங்களை உருவாக்கி காலத்தின் தேவையுணர்ந்து நூல்களாக வெளியீடு செய்வதும், வரவேற்கப்பட வேண்டிய அம்சமாகும். அத்துடன் அவை எதிர்காலத் தலை முறையினருக்கு, இக் காலத்தினர் தேடிவைக்கும் அரிய சொத்தாகவும் விளங்குகின்றது. அநத வகையில் உயர்தர மாணவர்களின் இம்முயற்சி மிகவும் பாராட்டிற்குரிய தொன்றாகும். தொடர்ந்தும் இவர்களது முயற்சி வளர்ச்சியுடையதாக விளங்க இறை ஆசீர்வேண்டி நிற்கின்றேன்.

இவ்வாறு யா/இளவாலை கன்னியர் மடம், ம.வி இல் இடம் பெற்ற உயர்தர மாணவர்களின் செயற்றிட்டமான இளவதனம்-2 நூல் வெளியீட்டு விழாவிற்கு ஆசியுரை வழங்கிய இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி அதிபர். அருட்பணி. J.A. யேசுதாஸ் அவர்கள் குறிப்பிட்டார். மேற்படி நிகழ்வு கள் யாவும். 11-03-2011 அன்று பாடசாலை மண்டபத்தில் அதிபர். அருட்சகோதரி. தயாநாயகி செபமாலை அவர்களின் தலைமையில் இடம் பெற்றது.

- அறிந்துகொள்ளுவோம் - **18**

திருச்சபையை வழிநடத்திய பாப்புமாரின் சுருக்கமான சரிதைகள்

## புனித பொன்தியானுஸ் – Saint Pontianus

கி.பி 235ம் ஆண்டில் அலெக்சாண்டர் செவறஸ் என்னும் சக்கரவர்த்தி கொலை செய்யப்பட்டார். அவனைத் தொடர்ந்து வந்த மாக்சிமின் இன்னொரு வேதகலாபனை யுகத்தை ஆரம்பித்து வைத்தான். இப்பாப்புதான் ஹிப்பொலிற்றசின் பேதகத்திற்காகப் போராடியவர். இவரும் சார்தினியாவிலுள்ள வெள்ளிச்சுரங்கங்களுக்கு அனுப்பப்பட்டார். அங்கு அவர் கி.பி 236ல் இறந்தார்.


2ம் ஆண்டு நினைவஞ்சலி

அருட்தந்தை ம. ததேயுஸ் சறத்ஜீவன்



"நல்ல ஆயன் நானே
தந்தை என்னை
அறிந்திருக்கிறார். நானும்
தந்தையை அறிந்திருக்கிறேன்.
அதுபோல நானும் என் ஆடுகளை
அறிந்திருக்கிறேன்
அவைகளுக்காக என் உயிரைக்
கொடுக்கிறேன்".
(யோவா 10: 14–15)



மலர்வு : 13-05-1968
குருத்துவம் : 14-05-2003
உதிர்வு : 18-05-2009

இவரின் ஆன்ம சாந்திக்காக 18-05-2011 அன்று காலை 6.00 மணிக்கு யாழ். புனித மரியன்னை பேராலயத்திலும், 19-05-2011 அன்று காலை 6.30 மணிக்கு புனித பறிமா அன்னை ஆலயம், உருத்திரபுரத்திலும் திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்படும்.

இல. 5 பற்றிக்ஸ் வீதி
யாழ்ப்பாணம்.

Advt-36/11

தகவல்: குடும்பத்தினர்.

20ம் ஆண்டு நினைவு



அருட்திரு.
லோ.வ. இராயப்பு அ.ம.தி

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில்
விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்
ஆண்டுகள் இருபது ஆனாலும்
அன்புடன் என்றும் உமை நினைப்போம்..
ஆண்டவன் இயேசுவை எப்போதும் சொல்லிய – உங்கள்
அன்பான வாழ்வை எப்போதும் நினைப்போம்
ஆண்டவன் சந்நிதியில் இளைப்பாறுங்கள்
எங்களுக்காகவும் பரிந்து பேசுங்கள்.

797 பீச்றோட்
பாஷையூர், யாழ்ப்பாணம்

Advt-39/11

பாலதாஸ் குடும்பத்தினர்.

S.A.E. இரட்ணராஜா 7ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 27-05-1935
இறப்பு 20-05-2004

குடும்பத்தில் சுடர் ஒளியாய்
சேவைதனில் ஓர் ஆசானாய்
ஊரினில் கலைவித்தகனாய் வாழ்ந்து
இறைபதமடைந்து தூயவரானீர்
இறைஞ்சுகின்றோம் உமக்காக!

இவரது அன்பில் நிலைத்திருக்கும்
மனைவி, திருமதி இ.இரட்ணராஜா,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கரம்பொன்.

Advt-38/11

Bishop Savundram Media Centre, No.891,
Hospital Road, Jaffna.Tel: 021 222 6085 mobile 0777165147

பீசப் சவுந்தரம் மீடியா சென்ரர் 2001ஆம் ஆண்டு முதல் வெளியிட்ட புத்தகங்கள் விற்பனைக்கு

ஒரு புத்தக விலை 250 ரூபா ஊடகவியலை பாடமாகப் படிப்போர் 200 ரூபாவிற்கு பிசப் சவுந்தரம் மீடியா சென்ரரில் பெறலாம்.

புத்தகங்களை அன்னை புத்தகசாலை நவீன சந்தை - பூபால சிங்கம் கொழும்பு - ஜெயா புத்தகசாலை கொழும்பிலும் பெறலாம்.

(1) பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம் (ஆண்டு 2001)
வடகிழக்கு மாகாண விருது பெற்றது.
இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது.
(2) பத்திரிகை இயல் அடிப்படைகள் (ஆண்டு 2002)
(3) மின்னியக்க பத்திரிகையியல் ஓர் அறிமுகம் (ஆண்டு 2003)
இலங்கை அரச சாகித்திய விருது பெற்றது.
இலங்கை இலக்கியப் பேரவை விருது பெற்றது.
(4) ஊடக இயல் கலைச்சொல் அகாரதி (ஆண்டு 2003)
(5) ஊடக நேர்காணல்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2004)
(6) செய்தித்தலைப்புக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2005)
வடகிழக்கு மாகாண விருது பெற்றது
(7) அச்சு ஊடக செய்தி அறிக்கையிடல் (ஆண்டு 2006)
(8) சித்திரிப்பு எழுத்துக்கள் ஓர் அறிமுகம் (ஆண்டு 2007) அச்சில்
(9) ஏடு இட்டோர் இயல் ஓர் அறிமுகம் (ஆண்டு 2011)

இணைப்பாளர்


இப்பத்திரிகை புனித வளன் கத்தோலிக்க அச்சக முகாமையாளரால் யாழ்ப்பாணம் 360, பிரதான வீதியில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2011 ஆம் ஆண்டு அச்சிட்டு வெளியிடப்பட்டது.